
யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
ரிகதீபம்

M229

# வணிக தீபம்

யா/நாவற்குழி

மகா

வித்தியாலயம்

1992 ஒக்டோபர்

## மன்றப்பொறுப்பாசிரியர் கருத்துரை.

யா/ நாவற்குழி மகா வித்தியாலய வணிக மாணவர் மன்றம் தனது 10 வது நூல் வெளியீட்டை உரிய காலத்தில் வெளியிடு செய்வதை இட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். ஏனெனில் ஒரு தாய் தனது கருவில் உருவாகிய சிசுவை 10 மாதங்கள் சுமந்துதான் பெற்றெடுக்கின்றாள். அதன் பின்பே அப்பிள்ளைக்கு கதைக்க, எழுத, பேச முடிகின்றது. அதேபோல வணிக மன்றமும் தனது முழுமையான, நிறைவான வணிகதீபத்தை அதாவது அச்சுப் பிரதியை 10 வது மாதத்தின் பின்னர் வெளியீடு செய்யும். இதற்கு இறைவன் துணைநிற்பாராக.

மேலும் எமது மன்றத்தின் செயற்பாடு என்றுமில்லாதவாறு நெருக்கடிக்குள்ளாகி வருகின்றது. ஆயினும் எமது மாணவர்களின் சக்தியினால் இவ்வாறான நெருக்கடிகளை தீர்த்துவிட முடியும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கு இச்சஞ்சிகையை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். அப்போது தான் எமது மன்றத்தின் குறிக்கோளை அடையமுடியும். எமது மன்றம் ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகியுள்ள இவ்வேளையில் எமது மாணவர்களின் வர்த்தக அறிவு எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது என்பது கவனிக்கவேண்டியதொன்றாகும்.

இம்முறை பொதுப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் வணிகத்துறையில் அதிகூடிய சாதனை படைக்க வேண்டும் என்பது எனது குறிக்கோளாகும். அதற்காக மாணவர்கள் கூடிய அக்கறை எடுத்துக் கல்வி கற்க வேண்டும். அதற்கு என்னாலான முழு ஒத்துழைப்பையும் தர நான் தயாராகவுள்ளேன். இதன் மூலமே எமது மன்றத்தின் செயற்பாட்டு வெற்றியை வெளிக்கொணர முடியும்.

மேலும் எமது சஞ்சிகையின் ஸ்தாபக இதழாசிரியர் அவர்கள் எமது மன்றத்தின் வளர்ச்சிக்காகவும் ஏனைய வணிக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வேலை செய்கின்றார். அவருடைய இச்சேவையை வணிகமன்றம் ஒரு போதும் மறக்க முடியாததுடன் இச்சேவைக்கு

நிகராக எதுவுமே வழங்க கூடியதுமல்ல. அவருடைய இந்நோக்கத்தை, செயற்பாட்டை ஏனைய வணிக மாணவர்கள் புரிந்து செயற்பட உதவுமாறும் உரிய காலத்தில் கட்டுரைகளை வழங்கி உதவுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்

நன்றி.

# மன்றத் தலைவர் உரை.

எமது பாடசாலையின் நிலைக்கண்ணாடியாய் விளங்கிக் கொண்டிருக்கின்ற வணிக மன்றத்தினால் வெளியிடப்படவிருக்கும் 10வது வணிக தீபத்தை நாம் உவகையுடன் வரவேற்கின்றோம். இந்த இக்கட்டான காலகட்டத்திலும் ஒரு மாதமும் தவறாது ஒழுங்காக எமது வணிகதீபம் வெளியிடப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைய வேண்டியவர்களாய் உள்ளோம். எமது மாணவர்களின் அறிவுத்திறனை வெளிக்கொணர்வதற்காக தொடர்ந்து இவ்வணிகதீபம் சுடர்விட்டு இலங்கட்டும்.

இந்நூலின் வெளியீட்டுக்கு சகல விதத்திலும் உரிய உதவிகளை ஆற்றிய, ஆற்றப்போகின்ற அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

நன்றி.

## இதழாசிரியர் நோக்கில் ----

வணிக மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும் வணிகதீபத்தின் 10 வது இதழ் உங்கள் கரங்களில் தவழ்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஏனெனில் இவ் வணிகதீபமானது "பலரது எதிர்பார்ப்புக்களை ஏமாற்றமாக்கி" இன்று 10 வது தீபமாகப் பிரகாசிக்கின்றது. "இவ்வணிகதீபம் தொடர்ந்து திறம்பட வெளிவரும்" என எதிர்பார்த்தவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய தொகையினரே. இப்பத்து இதழ்களும் உங்கள் கரங்களில் திகழ்வதற்கு எமக்கு சிறந்த வழிகாட்டியாக நின்று வர்த்தக மாணவர்களின் கல்விவளர்ச்சிக்காக அயராது பாடுபடும் எமது மன்ற பொறுப்பாசிரியர், வேண்டியபோது ஆக்கமும் ஊக்கமும் வழங்கி மாணவர்களை உற்சாகப்படுத்தி ஒத்துழைப்பு நல்கி வரும் ஆசிரியர்கள், தமது தரமான ஆக்கங்களையும் ஒத்துழைப்பையும் நல்கிவரும் வர்த்தக மாணவர்கள் ஆகியோரிற்கு எனது சார்பிலும் மன்றத்தின் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துகொள்கின்றேன்.

மேலும் எமது வணிகதீபமானது தொடர்ந்தும் திறம்பட வெளிவரவேண்டும். இவ்வணிகதீபம் கையெழுத்துப் பிரதியாக எமது பாடசாலைக்குள் மட்டும் முடங்கிக் கிடக்கக் கூடாது. இத்தீபம் எமக்கு மட்டுமன்றி, எமது பாடசாலைக்கு மட்டுமன்றி அனைத்து வர்த்தக மாணவர்களிற்கும் பயனளிக்கத்தக்கதாக அமைய வேண்டும். இதற்கு ஆண்டிற்கு ஒரு மலராவது அச்சுப்பிரதியாக வெளிவரவேண்டும். இதற்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் தமது பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்கி எம் கற்பனைக் கோலங்களை நிஜமாக்க உதவும் வண்ணம் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி.

- இதழாசிரியர் -

## இதழினுள்ளே -----


1. மூலதனச் செலவு ஆண்டு 9A. செல்வி க. உதயகுமாரி 1

2. அரச ஈட்டு வங்கி ஆண்டு 9A செல்வி புவனலோஜினி 2

3. அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் (FEECS) 3
ஆண்டு 10 A செல்வி வி. மதிவதனா

4. பண்டகசாலை ஆண்டு 10A செல்வன் இ. சுகந்தன் 5

5. மக்கள் வங்கி ஆண்டு 11A செல்வி தி. சுகந்தினி 6

6. வணிக அறிவியல் விடயங்கள் 9

7. வரிவிதிப்பினால் ஏற்படும் தாக்கங்கள் ஆண்டு 10B 10

8. சுமைச்சீட்டு ஆண்டு 9C செல்வி கு. குமாரிகா 12

9. வர்த்தக தர்மம் திரு. சி. சதாசிவம் ஆசிரியர். 13

10 கப்பற் கூட்டுத்தாபனம் ஆண்டு 9B செல்வன் . ச. கணேஸ்குமார் 14

11 சரக்கிருப்பு கட்டுப்பாடு ஆண்டு 11A செல்வி . க. கவிதா 15 ✓

12. பொருளாதார அபிவிருத்தி ஆண்டு 11A செல்வி. ஆ. இரத்தினாம்பாள் 17

13. கம்பனியும் முடிவுக்கணக்குகளும் 19

14. முதன்மை ஏடுகள் ஆண்டு 9A செல்வி ந. குகதர்சினி 23

15. க. பொ. த (சாத) பரீட்சை வினாத்தாள்.
வர்த்தகமும் கணக்கியலும் I, II 25 — 40


xxx xxx xxx

# மூலதனச்செலவு

ஒரு நாட்டினது குறிப்பிட்ட வருட மூலதன மட்டத்தினை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவினங்களே மூலதனச் செலவினங்கள் ஆகும். நீண்டகால பொருளாதார அபிவிருத்திக்காக இவை மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டின் பேரினப் பொருளாதார மாறிகளான தேசிய உற்பத்தி, தொழில் வாய்ப்பு, ஏற்றுமதி, விலைமட்டம் என்பவற்றை மாற்றக்கூடிய செலவினங்களாக இவை அமையும். நாட்டின் குடிப்பெருக்கம், தொழிற்படை விரிவு, பணவீக்கம் என்பவற்றிற்கேற்ப இச்செலவினங்கள் அதிகரிக்கப்படுவதுண்டு.

பாரிய செயல்திட்டங்களை அமுல் நடத்துவதற்கான செலவினங்கள் இவையாகும். அண்மைக் காலங்களில் துரிதமகாவலி அபிவிருத்தித் திட்டம், வீதி அபிவிருத்தி, வானூர்தி நிலைய அபிவிருத்தி, தொலைத்தொடர்பு வலையமைப்பு அபிவிருத்தி போன்ற திட்டங்களிற்கான செலவினங்களைக் குறிப்பிடலாம்.

மூலதனச் செலவுகளை பிரதானமாக நான்காக வகுத்துக்கூற முடியும்.

அவையாவன:

(i) நிலையான மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு.
(ii) மூலதன மாற்றல்கள்.
(iii) திறைசேரி வைப்புக்களின் மாற்றம்.
(iv) குறைச் செலவு ஒதுக்கம்

என்பனவாகும்.

அரசதிணைக்களங்கள், அமைச்சுக்கள் என்பவற்றினால் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட மூலதன செயற்றிட்டங்கள் சார்ந்த செலவுகள் நிலையான சொத்துக்களின் கொள்வனவு என்பதில் அடங்குகின்றன. இவை மொத்த மூலதனச் செலவினங்களில் 35% ஆகக் காணப்படுகின்றன.

பாராளுமன்றக் கட்டிடம், ஜனாதிபதி செயலகம்

போன்ற நிர்வாக ரீதியிலான முதற் செலவினங்கள் இதில் அடங்கும். ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி, நிகழ்ச்சித் திட்டம், பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம், மாவட்ட அபிவிருத்திச் சபைகள் என்பவற்றினூடாக மாவட்ட மட்டங்களில் மேற்கொள்ளப்படும் செலவுகளும் இதில் உள்ளடக்கப்படுகின்றன.

அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய செயற்திட்டங்கள் பலவற்றை அரசாங்கப் பகுதியினர் நிறைவேற்ற முடியாத இடத்து அப்பொறுப்புக்களை வேறு அமைப்புக்கள் ஏற்றுக் கொள்வதுண்டு. அதற்காக அப்பகுதியினருக்கு அரசாங்கம் கொடுக்கின்ற கொடுப்பனவுகள் இவையாகும்.

இவை பெருமளவுக்கு அரச கூட்டுத் தாபனங்களினால் மேற்கொள்ளப்படும் மூலதன முதலீடுகளிற்காக கொடுபடுவனவாகக் காணப்படுகின்றன.

அரசாங்கம் மூலதனத் தேவைகளிற்குப் பயன்படுத்துவதற்கென திறைசேரி வைப்புக்களைப் பேணுவதுண்டு.

அரசாங்கம் குறிப்பிட்ட வருடத்தில் ஒதுக்கும் செலவுகள் முழுவதையும் பல்வேறு காரணங்களினால் மேற்கொள்ள முடியாது போகலாம். இது மொத்த மூலதனச் செலவுத் தொகையை மாற்றிவிடும்.

செல்வி. க. உதயகுமாரி
ஆண்டு 9A.

# அரச ஈட்டு வங்கி

அரச ஈட்டு வங்கி 1931 ஆம் ஆண்டின் அரச ஈட்டுவங்கிச் சட்டத்தினால் உருவாக்கப்பட்டது.

இவ்வங்கியானது பின்வரும் செயற்பாடுகளைத் தனது நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

(i) விவசாயத்திற்கான காணிகளைக் கொள்வனவு செய்தல், குத்தகைக்கு எடுத்தல் ஆகியவற்றிற்கு கடன் வசதியளித்தல்.

(ii) உற்பத்தி செய்யப்பட்ட விவசாயப்பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு உகந்த முறைகளையும் உபகரணங்களையும் பெற்றுக் கொள்வதற்கு கடன் வசதியளித்தல்.

(iii) வீடு கட்டுவிற்கு நிதி வசதியளித்தல். ஈடு வைத்த வீட்டை மீட்பதற்கு அல்லது ஈடு வைத்த, வீடு கட்டுவதற்கான காணியை மீட்பதற்குக் கடன் வசதியளித்தல்.

(iv) வீடு கட்டுவதற்கு உகந்த நிலத்தை வாங்குதல், அல்லது வீடு வாங்குதல்; வீட்டை அல்லது வீடுகட்டுவதற்கு உகந்த நிலத்தை 49 வருடத்திற்குக் குறையாத காலத்திற்கு குத்தகைக்கு எடுப்பதற்கு கடன் வசதியளித்தல்.

(v) மேலே கூறப்பட்ட நோக்கங்களிற்காக கடன்பட்டவர்கள் கடனிலிருந்து மீள்வதற்காக கடன்வசதியளித்தல்.

(vi) மேலே கூறப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு ஏதுவான வேறெதையும் செய்வதற்கு நிதி வசதியளித்தல்.

போன்றன.

இந்த நோக்கங்களை அடைவதற்கு நீண்டகாலக் கடனை இந்நிறுவனம் வழங்குகின்றது. 2000/= தொடக்கம் 10 லட்சம் ரூபா வரை வழங்கப்படும் இக்கடனை கட்டி முடிப்பதற்குக் கொடுக்கப்படும் காலத்தவணை 5 வருடங்களிலிருந்து 25 வருடங்கள் வரையாகும். கடனை வழங்குவதற்கு அசைவற்ற ஆதனங்களையே

பிணையாகப் பெற்றுக்கொள்கின்றது. இலங்கைப் பிரஜைகளிற்கு மட்டுமே இக்கடன் வழங்கப்படுகின்றது.

இவ்வங்கி தனக்குத் தேவையான மூலதனத்தை அரசாங்கத்திடமிருந்து கடனாகவும், வர்த்தக வங்கிகளிலிருந்து மேலதிகப்பற்றாகவும் முக்கியமாகப் பொது மக்களிற்குத் தொகுதிக்கடன்களை வழங்கியும் பெற்றுக் கொள்கின்றது. தொகுதிக் கடன்களிற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கின்றது.

இது பொது மக்களிற்குப் பின்வரும் சேவைகளை வழங்கி வருகின்றது.

(I) தேயிலைத் தொழிற்சாலைகளை நவீன முறையில் திருத்தி அமைப்பதற்கு கடன் வழங்குகின்றது. 10 லட்சம் ரூபாவிற்கு அதிகரிக்காமலும் 15 வருடத்துள் திருப்பிக் கட்டும் நிபந்தனையிலும் இக்கடன் வழங்கப்படுகின்றது.

(II) மீள நடுகை மானியத்திட்டத்தின் கீழ் தேயிலை மீள நடுகைக்கு பெருந் தோட்டங்களிற்குக் கடன் வழங்குகின்றது.

(III) மாடு வளர்த்தல், கோழி வளர்த்தல், பன்றி வளர்த்தல், ஆடு வளர்த்தல், ஆகியவற்றிற்கு கடன் வழங்கப்படுகின்றது.

(IV) வீடு கட்டுதல், வீடு விஸ்தரித்தல் ஆகியவற்றிற்கு கடன் வழங்குகின்றது.

(V) கடன் மீட்பிற்கு கடன் வழங்குதல் போன்றன.

செல்வி. புவனேஜினி.
ஆண்டு 9A

# அந்நியச் செலாவணி உரிமைச்சான்றிதழ்த் திட்டம். (FEECS)

இலங்கையின் சென்மதி நிலுவைப் பிரச்சனைகளிற்குத் தீர்வு காணப்படுவதற்கு ஏற்ற வகையில் மரபுவழியற்ற ஏற்றுமதியாளர்க்கு ஊக்கமளிக்கவும் அவசியமற்ற பண்டங்களின் இறக்குமதியாளர்க்கு கட்டுப்பாடு விதிக்கவும் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடைமுறையே அந்நியச் செலாவணி உரிமைச்சான்றிதழ் திட்டம் ஆகும்.

1960 இலிருந்து கையாளப்பட்ட கடுமையான செலாவணிக் கட்டுப்பாடுகளினால் உள்நாட்டின் கைத்தொழில் முயற்சிகளிற்குத் தேவையான மூலப்பொருட்களைக் கூடப் பெறமுடியாதிருந்தது. கைத்தொழில்கள் முழுமையாக இயங்க முடியாமலும் போயிற்று. இந்த நிலைமைகளைத் தவிர்க்க செலாவணிக் கட்டுப்பாட்டினை மிகக்கவனமாக, உற்பத்தித் திறனுடைய முறையில் தளர்த்திக் கொள்வதற்கு இந்நடைமுறை கையாளப்பட்டது.

ஏற்றுமதியை ஊக்குவிக்க இரண்டு நாணய மாற்று விகிதங்கள் நிலவுவது அவசியம் எனக்கருதப்பட்டதா -லும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டம் மரபுவழியல்லா ஏற்றுமதியைத் தூண்டுதல் ஆடம்பர இறக்குமதியைக் கட்டுப்படுத்தல் போன்ற இரண்டு விதமான செயற்பாடுகளைக் கொண்டதாக இருந்தது.

மரபுவழியல்லாத ஏற்றுமதிப் பண்டங்களை ஏற்றுமதி செய்வதால் உழைக்கும் அந்நியச் செலாவணித்தொகைக்கு மேலதிகமான 44% சன்மானமாகக் கொடுக்கப்படும். இவ்வாறு FEECS கட்டணம் பெறமுடியாதன அட்டவணை A யிலும் பெறக்கூடியன அட்டவணை B யிலும் உள்ளடக்கப்பட்டன. இதில் வாசனைத்திரவியங்கள், இரத்தினக்கற்கள், கடலட்டை போன்ற பண்டங்கள் அடக்கப்பட்டிருந்தன. இவ்வேற்றுமதியாளர்கள் 100/= இற்கான அந்நியச் செலாவணி உழைக்குமிடத்து FEECS கட்டண ஊக்குவிப்பாக மேலதிகமாக 44/= உம் கொடுக்கப்படும். இதனால் 144/= பெறமுடியும். உல்லாசப் பயணிகளாக நாட்டிற்குள்

வருவோரும் FEECS கட்டணம் பெற்றனர். இதனால் சுற்றுலாத்துறை ஊக்குவிக்கப்படலாயிற்று.

இந்த ஊக்குவிப்புத் தொகை 1969 இல் 55% ஆகவும் 1972 இல் 65% ஆகவும் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டின் உற்பத்திப் பெருக்கம், தொழில் வாய்ப்புப் போன்றவற்றை அதிகரிக்கும் நோக்குடன் அவசியமான மூலப்பொருட்கள் முதற்பொருட்கள் போன்றவற்றின் இறக்குமதிகளுக்கு மாத்திரம் செலாவணி அனுமதியை வழங்குவது இதில் பிரதானமாகக் கருதப்பட்டது. இதனால் அவசியமற்ற இறக்குமதிகளின் கொடுப்பனவிற்காகப் பயன்படுத்தப்படும் 100/= இற்கான செலாவணியைப் பயன்படுத்துவதற்கு 'தண்டப்பணமாகக்' FEECS கட்டணம் 44/= செலுத்த வேண்டும். இதனால் மொத்தமாக 144/= செலுத்தியே 100/= உரிய செலாவணியைப் பயன்படுத்தலாம்.

இந்த FEECS திட்டம் 1968 மே மாதத்திலிருந்து 1977 நவம்பர் வரை நடைமுறையிலிருந்தது. இந்த ஒரு தசாப்த காலத்தில் அது பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது. அவை,

(i) போதியளவு உள்ளீடுகளைப் பெறமுடியுமானதனால் கைத்தொழில் முயற்சிகள் விரிவடைந்தன. 1968 இல் கைத்தொழில் வளர்ச்சி 17% ஆயிருந்தது. 1969 இல் 20% ஆகக் கூடியிருந்தது.

(ii) கைத்தொழில் துறை வளர்ச்சியுடன் சுற்றுலாத் துறையும் ஊக்குவிக்கப்பட்டதால் தொழில் வாய்ப்பு விரிவடைந்தது. இதனால் தொழிலின்மை குறையலாயிற்று.

(iii) ஏற்றுமதி பன்முகப்படுத்தல் முயற்சி பெருமளவில் வெற்றி பெற முடியுமானமைக்கு இத்திட்டமும் குறிப்பிடத்தக்களவில் பங்காற்றியிருந்தது. 1968 இல் 6.5% ஆயிருந்த மரபுவழியல்லாத ஏற்றுமதிகள் 1974 இல் 29% ஆக உயர்வதற்கு உதவிற்று.

(IV) FEECS கட்டணம் செலுத்தி இறக்குமதி செய்யமாட்டார்கள் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கள்ளச்சந்தையில் இறக்குமதி ஆடம்பரப்பண்டங்களை அதிக இலாபத்துடன் விற்க முடிந்ததால் அதிகளவில் இறக்குமதி செய்தனர். இதனால் FEECS கட்டணம் அரசின் பிரதான வருமானம் தரும் நேரில் வரிகளின் ஒன்றாகக் காணப்பட்டது. FEECS வீதங்கள் 44%, 55%, 66% என அதிகரிக்கப்பட்ட போது அரசிறையும் கணிசமாக அதிகரித்துச் சென்றது.

எனினும் இந்த நடைமுறை வர்த்தக நிலுவையை சாதகமாக்கவோ சென்மதி நிலுவை நெருக்கடியைக் குறைக்கவோ உதவவில்லை.

அத்துடன் மறைமுகமான நாணய மதிப்பிறக்கம் போன்ற கருத்தை உல்லாசப் பயணிகளைப் பொறுத்தும் ஆடம்பர இறக்குமதியாளர்களைப் பொறுத்தும் ஏற்படுத்தியிருந்தது.

1977 ஜூலை மாதத்தில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் 1977 நவம்பரில் இத்திட்டத்தை அகற்றியது. அதற்கு காரணங்களாவன:

(I) தாராள இறக்குமதி அனுமதிக்கப்படுவதால் இது அவசியமற்றது.

(II) கள்ளச்சந்தை மாதிரியில் ஒரு சிலர் அதிக இலாபம் உழைக்க இது உதவியாக இருந்தமை விரும்பப்படாமை.

(III) இரட்டை நாணய மாற்று விகிதம் குழப்பம் தருவதாய் இருந்தமையினால் அதை அகற்றி மிதக்கும் நாணய மாற்று விகிதம் கையாளப்படுமென கருதப்பட்டமை என்பனவாகும்.

வி. மதிவதனா
ஆண்டு 10 A

# பண்டகசாலை

பண்டகசாலை எனப்படுவது பண்டங்களைப் பாதுகாப்பாக வைக்கும் இடம் ஆகும். இது இரு வகைப் -படுகின்றது. அவையாவன:

(i) சொந்தப் பண்டகசாலை

(ii) பொதுப் பண்டகசாலை.

தனது சொந்தத் தேவைக்காக ஒருவரால் அமைக்கப்படும் பண்டகசாலை சொந்தப் பண்டகசாலை எனப்படும். பொதுவாகப் வியாபாரப் பிரதிநிதிகளால் இப்பண்டகசாலை அமைக்கப்படும். அரசாங்கம் தனது சொந்தத் தேவைகளிற்காக அமைக்கும் பண்டகசாலையையும் சொந்தப் பண்டகசாலை என்ற வகை உள்ளடக்கும்.

உதாரணம்:

(i) இலங்கையில் நெற்களஞ்சியங்கள்

(ii) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையப் பண்டகசாலை

வாடகைக்காக நிறுவப்படும் பண்டகசாலைகள் பொதுப்பண்டகசாலைகள் எனப்படும். இவை பொதுவாகத் துறைமுகங்களிலே காணப்படும். துறைமுகங்களிலே காணப்படும் பண்டகசாலைகள் சுங்கப்பண்டகசாலை, வரிகொடுத்தபண்டகசாலை என பலவகைப்படும்.

சுங்கப்பண்டகசாலை தீர்வையிடும் பண்டகசாலை எனவும் அழைக்கப்படும். இறக்குமதி செய்வோர் சுங்கவரிகளைக் கொடுக்கும் வரை பண்டங்களைத் தடுத்து பாதுகாப்பாக வைக்கும் இடம் சுங்கப் பண்டகசாலை எனப்படும். வரி செலுத்திய பின்பே பண்டங்கள் எடுத்துச்

செல்ல அனுமதிக்கப்படும். ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களும் சுங்கவரி கொடுக்கும் வரை கப்பலில் ஏற்றப்பட மாட்டாது.

துறை முகத்திலிருந்து வரிகொடுத்து எடுக்கப்பட்ட பண்டகசாலைகள் சிறிது காலத்திற்கு மட்டுமே இப்பண்டக வைக்கப்படும். போக்குவரத்து வசதிகள் கிடைத்ததும் இப்பண்டங்கள் எடுத்துச் செல்லப்படும்.

பொதுவாகப் பண்டகசாலையின் தொழில்களாகப் பின்வருவன காணப்படுகின்றன.

(1) பண்டங்கள் தேவைப்படும் நேரத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ள வசதி செய்து கொடுக்கும். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பண்டங்களைச் சேகரித்து வைத்து மொத்த வியாபாரிகளிற்குத் தேவையான நேரத்தில் விரைவில் வழங்கும்.

(11) பண்டங்கள் முக்கியமாக விளை பொருட்கள் போகப் பயிர்களாக இருப்பதனால் அவற்றைப் பாதுகாத்து வைத்து போகமற்ற காலங்களிலும் வழங்கின் -றன. இவ்வாறு செய்வதனால் பண்டங்களை எக்காலத் -திலும் அளிப்பதுடன் விலைத்தளம்பலையும் ஓரளவிற்குத் தடுக்கின்றது.

(111) பண்டங்களைப் பார்வையிடச் சந்தர்ப்பம் அளிப்பதுடன் கொள்வனவாளர் பண்டங்களைக் கொள்வனவு செய்யும் சந்தையாகவும் அமைகின்றது.

(1V) பண்டகசாலை காப்புறுதி செய்யப் படுவதனால் உரிமையாளருக்கு கொள்ளை, தீ போன்ற விபத்து களில் இருந்து பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது.

செல்வன். இ. சுகந்தன்.
ஆண்டு 10 A

# மக்கள் வங்கி.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மூலதனம் அதிகப்படியாகத் தேவைப்படுகின்றது. இலங்கையிலுள்ள மக்களில் பெரும்பாலானோர் விவசாயிகளாவர். இவர்களில் அநேகமானோர் ஏழை விவசாயிகள். இவர்கள் தமது தேவையைப் பூர்த்தி செய்ய கடன்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் இவர்கள் முதலாளிகளின் வலைக்குள் சிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இம்முதலாளிகளின் வலையில் சிக்கித் தவிக்கும் விவசாயிகளிற்கு புத்துயிர் அளித்து விவசாயத்தைப் பெருக்கும் நோக்குடன் விவசாயிகளிற்கு கடன்கொடுத்து உதவி செய்வதற்காகவே மக்கள் வங்கி ஏற்படுத்தப்பட்டது. 1949 ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்களிற்கு உதவி செய்ய உருவாக்கப்பட்ட கூட்டுறவு சமஷ்டி வங்கி நல்ல முறையில் இயங்காத காரணத்தினால் அதன் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கொண்டு மக்கள் வங்கி தாபிக்கப்பட்டது.

விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் ஏராளமான மூலதனம் வேண்டும். இம்மூலதனத்தை விவசாயிகளிற்கு நீண்ட காலத்திற்குக் கடனாகக் கொடுத்து உதவுவதே மக்கள் வங்கியின் அடிப்படைக் கொள்கையாகும். இலங்கை சுதந்திரமடைந்ததும் இலங்கை அரசாங்கமானது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், வெளிநாட்டு செலாவணியைச் சேமிப்பதற்கும் உள்நாட்டில் வேலையில்லாப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கும் வெளிநாட்டிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்யாமல் உள்நாட்டிலேயே இறக்குமதி செய்யும் திட்டங்களை ஆரம்பித்தது. குடிசைக்கைத்தொழில்களையும் பாரிய கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்வதற்குப் போதிய மூலதனம் கிடைக்கவில்லை. இக்குறைகளைப் போக்குவதற்காக அரசாங்கத்தால் 1961 ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்றச் சட்டப்படி மக்கள் வங்கி உருவாக்கப்பட்டு அவ்வாண்டு பூரணமாகவும் இயங்கத்

தொடங்கியது.

இதன் மூலதன அமைப்பு 60 லட்சம் ரூபாவாகும். இதில் 50% பங்குகள் அரசாங்கத்தால் முதலீடு செய்யப்பட்டன. மிகுதியை கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுறவு சமஷ்டி வங்கிகளும் முதலீடு செய்தன. மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் நீண்டகாலக் கடன்களைக் கொடுப்பதற்கு காலத்திற்குக் காலம் மக்கள் வங்கிக்குப் பணம் கொடுத்து வருகின்றது. நீண்டகால நடுத்தரக் கடன்களைக் கொடுப்பதற்கு போதிய பணம் இல்லாவிடில் மக்கள் வங்கி மந்திரியின் அனுமதியைப் பெற்று தமது தொகுதிக் கடன்களை மத்திய வங்கி மூலம் விற்று தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்ளும். மக்கள் வங்கியானது வருமான வரி, இலாபவரி, முத்திரை வரி ஆகியவற்றிலிருந்து விலக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் விவசாயிகளிற்கு சேமிப்புப் பழக்கத்தினை உண்டாக்கும் நோக்குடன் விவசாயிகளிற்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விவசாயக் கடன்களை கொடுத்து உதவி செய்து வருகின்றது. விவசாயம், கைத்தொழில் வியாபாரம் என்பவற்றிற்கு குறுங்கால, இடைக்கால, நீண்டகாலக் கடன்களை கொடுத்து உதவி செய்கின்றது.

இதன் நிர்வாகம் இயக்குனர் குழு ஒன்றினால் நிர்வகிக்கப்படுகின்றது. இயக்குனர் குழுவில் கூட்டுறவு ஆணையாளர் ஒருவரும் கிராமிய அபிவிருத்தி மந்திரியால் நியமிக்கப்பட்ட ஒருவரும் நிதிமந்திரியால் நியமிக்கப்பட்ட ஒருவரும் அங்கம் வகிப்பர்.

கிராமமக்கள் இலகுவில் தொடர்பு கொள்ளும் பொருட்டு கிராமங்களிடையே மக்கள் வங்கிக் கிளைகள் நிறுவப்பட்டுள்ளன. நாடு முழுவதிலும் இதுவரை 91 க்கு மேற்பட்ட மக்கள் வங்கிக் கிளைகள் நிறுவப்பட்டுள்ளன.

நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்கையும் சேமிப்புக் கணக்கையும் வைப்பதற்கு மக்கள் வங்கி உதவி செய்கின்றது.

விவசாயத்திற்குக் (நவீன முறையில் உரம், கிருமி நாசினிகள், களை பிடுங்குதல், அறுவடை செய்தல், நிரை நாற்று நடுதல் போன்றவற்றிற்கு) கடன் கொடுப்பதோடு சிறு கைத்தொழில்களிற்கும் கடன் கொடுத்து உதவி செய்கின்றது. இதன் பொருட்டு இன்று நாட்டில் சிறுகைத்தொழில்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஒரு நாட்டில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் அவ்விவசாயத்தின் அச்சாணியாக விளங்கும் பண்ணைத்தொழில் அபிவிருத்தியடைதல் வேண்டும். பண்ணைத் தொழில் அபிவிருத்தியடைதல் விவசாய வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாகும். வயல்களை உழுது பண்படுத்துவதற்கும் வயல்களிற்குத் தேவையான பசளைகளைப் பெறுவதற்கும் பண்ணை-கள் உதவுகின்றன. ஆகவே தான் பண்ணைத்தொழில் அபிவிருத்திக்கும் கடன் கொடுத்து உதவி செய்கின்றது.

இது கூட்டுறவுச் சங்கங்களிற்கும் சமாசங்-களிற்கும் மேலதிகப்பற்று மூலம் உதவி செய்து வருகின்றது. மேலும் நாட்டிலுள்ள கமக்காரர்களிடமிருந்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அரசாங்கம் நெல்லைப் பெறும் பொழுது அரசாங்கத்தின் நெல் குத்தும் இயந்திரத்தை கூட்டுறவுச் சங்கங்களும் சமாசங்களும் எடுத்து நடாத்துவதற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சமாசங்களிற்கும் மக்கள் வங்கி கடன் கொடுத்து உதவி செய்கின்றது

நகை அடைவு பிடித்தல் காரணமாக ஏழை மக்கள் பணம் படைத்தவர்களிற்குக் கூடிய வட்டி வீதத்தில் சிறிய தொகைக்கு அதிக வட்டிப்பணம் செலுத்த வேண்டியிருப்பதனால் தம் வறுமை காரணமாக பல சந்தர்ப்பங்களிலும் தாம் அடைவு வைத்த அல்லது பொறுப்பாகக் கொடுத்த உடைமைகளை விற்கவேண்

-டிய நிலை ஏற்படுகின்றது. பணம் படைத்தவர்கள் ஏழைகளை விழுங்கும் இம்முறையை நீக்கும் பொருட்டும் மக்கள் வங்கிகள் குறைந்த வட்டி வீதத்தில் நகை அடைவு பிடிக்கும் தொழிலை மேற்கொண்டுள்ளன. இதனால் ஏழைகள் குறைந்த வீத வட்டிக்கு தங்க நகைகளை அடைவு பிடிக்கக்கூடியதாக இருக்கின்றது. இத் தொழிலைச் செவ்வனே செய்வதற்கு மக்கள் வங்கிகள் சில தொழிலாளர்களிற்கு பயிற்சி அளித்து வருகின்றது. மேலும்

மக்கள் வங்கி கிராமப்புற கடன் வசதியை கிராமிய வங்கிகள் மூலமாகவும் கிராமிய வங்கி இல்லாத இடங்க-ளில் நேரடியாகவும் செய்து வருகின்றது. இக்கடன் வசதியை இரண்டு வகையாகச் செய்து வருகின்றது.

அநேகமான கிராம வாசிகளின் கடன்தொகை பெரும்பாலும் பெருந்தொகையாக இருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அவர்கள் விவசாயம் செய்யும் பொருட்டு கடன் எடுப்பதனாலும் கூடிய வட்டிக்கு முதலாளிகளிடமிருந்து கடன் பெறுவதனாலும் பயிர் விளைந்து கொண்டிருக்கும் போது அத் தானியத்தைப் பொறுப்பாகக் கொடுத்து கடன் எடுப்பதனாலும் நுகர்விற்குத் தேவையான பொருட்களை கடனுக்கு வாங்கி அதற்கு ஈடாக அறுவடையின் பெரும் பங்கைக் குறைந்த விலையில் கொடுப்பதனாலும். மேலும் திருவிழா முதலிய விழாக்களை வெகு விமர்சையாகச் செய்வதனாலும் மரணச்சடங்குகள் பெரிதாகக் கொண்டாடுவதனாலும் அவர்களிற்கு அதிக கடன் ஏற்படுகின்றது. இக்கடன்களையும் அவர்கள் அவர்கள் தீர்க்கும் பொருட்டு மக்கள்வங்கி கடன் வசதியை விஸ்தரிக்கப்பட்ட முறையில் செய்து வருகின்றது. இதற்காக நாட்டிலுள்ள பண்டகசாலைகளில் கூடிய முதன் சேவை ஆற்றக்கூடிய 38 பண்டகசாலைகளைத் தேர்ந்தெடுத்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பண்டகசாலைகளிற்கு மக்கள் வங்கி கடன் கொடுக்க அப்பண்டகசாலைகள் தங்களுடைய அங்கத்தவர்களிற்கு அவர்களின் கடன்களைத் தீர்க்கும் பொருட்டும்

கமத்தொழிலிற்கும் கைத்தொழிலிற்கும் உதவி செய்யும் பொருட்டு ரூபா 500 தொடக்கம் ரூபா 3000 வரை விஸ்தரிக்கப்பட்ட முறையில் கடன் கொடுத்து உதவி செய்து வருகின்றது.

வறிய மாணவரிற்கு கடன் கொடுத்து உதவும் பொருட்டு மக்கள் வங்கி ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது. பல்கலைக் கழகங்கள், கனிட்ட பல்கலைக் கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களிற்கு படிக்கும் பொழுது பணத்தைக் கடனாகக் கொடுத்து, படித்து முடித்து தொழில் வாய்ப்பு பெற்றதும் அவர்களிடமிருந்து கடனை திருப்பிப் பெறுகின்றது.

வறியவர்களினதும் நடுத்தர வகுப்பினரினதும் சேமிப்பை அதிகரிப்பதற்காக மக்கள் வங்கி சேமிப்பிற்குக் கொடுக்கும் வட்டி வீதத்தை அதிகரித்துள்ளது.

செல்வி. த. சுகந்தினி
ஆண்டு 11A

# வணிக அறிவியல் விடயங்கள்.

1. மூலதன உரிமைச்சான்றிதழ் என்றால் என்ன?

ஜனசக்தி திட்டத்தின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியில் இடப்பட்ட பணத்திற்காக வழங்கப்படும் சான்றிதழ் ஆகும்.

2. வார்ராமம் என்றால் என்ன?

கப்பலில் பொருட்கள் ஏற்றப்பட்டதை உறுதிப்படுத்தி கப்பற்கம்பனியால் வழங்கப்படும் பற்றுச்சீட்டாகும். இது சமைச்சீட்டு எனவும் அழைக்கப்படும். இது பொருட்களை உரிமைகோர முன்வைக்கப்படும் ஆவணம் ஆகும்.

3. சர்வதேச வியாபாரத்தில் விரைவாகக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும் கொடுப்பனவு முறை எது?

தந்தி மாற்று.

4. உலகவங்கியின் தலைமை அலுவலகம் எங்கு அமைந்துள்ளது?

அமெரிக்கஐக்கிய நாட்டிலுள்ள வாஷிங்டனில்.

5. நாடுகளின் பணஅலகுகளை குறிப்பிடுக.

சீனா - யுவான்,
சிங்கப்பூர் - டொலர்
மலேசியா -
கனடா - கனேடியடொலர்
சுவிஸ்லாந்து - பிராங்

6. பணவீக்கம் என்றால் என்ன?

ஒரு நாட்டின் உற்பத்தி இன்றிய பணவெளியீடு or உள்வருகையில் அதிகரிப்பு ஏற்படும் போது உருவாவதே பணவீக்கம் ஆகும்.

7. ஒரு நாட்டின் தேசிய வருமானம் எவ்வழிகளில் கணிக்கப் -படுகின்றது?

(i) வருமானவழி.
(ii) செலவினவழி.
(iii) உற்பத்திவழி

8. நேர்வரி என்றால் என்ன?

ஒருவர் வரியை நேரடியான தனது நடவடிக்கையின் மூலம் வழங்குவதைக் குறிக்கும்.

உ+ம்: வருமானவரி, செல்வவரி.

9. Bin Card (பின்காட்) என்றால் என்ன?

ஒரே அட்டையில் பொருட்களின் பொதுவான விபரங்களைக் காட்டுகின்ற பத்தாய அட்டையே இதுவாகும்.

10. இலங்கை உரக் கூட்டுத்தாபனம் எப்போது நிறுவப்பட்டது?

1964 ம் ஆண்டு.

## வரிவிதிப்பினால் ஏற்படும் தாக்கங்கள்.

அரசாங்கம் நேர்வரிகள், நேரில் வரிகள் போன்றவற்றை உற்பத்திகள் தொடர்பாயும் சேவைகள் தொடர்பாயும் விதித்து வருகின்றது. காலத்திற்குக் காலம் வரிகளின் வீதங்களையும் வரிவிதிப்பிற்குரிய பரப்புக்களையும் மாற்றியும் வருகின்றது. இந்த நடைமுறைகள் பொருளாதாரத்தில் பல்வேறு துறைகளைப் பாதித்து வருகின்றது

நேரில் வரிகள் எல்லா வகையான பண்டங்களிலும் அவற்றின் பல்வேறு உற்பத்தி நிலைகளிலும் விதிக்கப்படுவதனால் விலை உயர்கின்றது. இதனால் நுகர்வோர் தமது நுகர்வு மட்டங்களைக் குறைத்துக் கொள்கின்றனர். அத்துடன் எல்லா அத்தியவசியப் பொருட்கள், சேவைகளில் வரிவிதிப்பதனால் விலைகள் உயரும்போது பணவீக்க நிலை தோன்றுகின்றது. இதனால் மக்களின் மெய்வருமானம் வீழ்ச்சியுறும். இதனாலும் நாட்டின் நுகர்வு மட்டம் குறையும்.

இதே போல, நேர்வரிகளான வருமானவரிகள், செல்வவரிகள், கொடைவரிகள் என்பவற்றை விதிப்பதன் மூலம் நுகர்வோரின் செலவிடத்தக்க வருமானம் குறையும். இதனாலும் நுகர்வைக் குறைத்துக் கொள்வர்.

இதற்கு மாறாக அரசாங்கம் அத்தியவசியப் பண்டங்கள் மீதான நேரில் வரிகளைக் குறைத்தால் நுகர்வோர் நுகர்வு மட்டத்தை அதிகரித்துக் கொள்வர். வாழ்க்கைத்தரம் உயரும். இதேபோல் நேரில் வரிகள் சிலவற்றை அகற்றினால் அல்லது அவ்வரிவீதங்களைக் குறைத்தால் மெய்வருமானம் அதிக்க வாழ்க்கைத்தரம் கூடும்.

உற்பத்தியாளர்கள் மீது அரசாங்கம் வரி விதிக்கும் போது அவர்களின் இலாபம் குறைந்து போகும்.

இதனால் முதலீட்டிற்கான ஊக்கம் குறைந்து போகும். பங்குலாபங்களின் மீது வரிவிதிப்பதும் இதே போல் முதலீடும் ஆர்வத்தைக் குறைக்கச் செய்து விடும். இது தேசிய உற்பத்தி பெருகுவதற்கு தடையாக அமைந்து விடும்.

இலங்கை போன்ற அந்நிய முதலீடுகளை அதிகளவில் எதிர்பார்க்கும் நாடுகள் தனியார் முதலீடுகளை ஊக்குவிக்க விரும்பும் நாடுகளிற்கு இத்தகைய முதலீடு தொடர்பான வரி விதிப்பு பாதக விளைவை ஏற்படுத்தும்.

இதற்கு மாறாக, முதலீட்டாளர்க்கான வரிச்சலுகைகளும், வரிவிடுதலைகளும் வழங்கப்படுமிடத்து, உற்பத்தியாளர் ஊக்குவிக்கப்படுவர்.

நாட்டின் முதலாக்கத்தைத் தூண்டுவதற்கும் வரிவிதிப்பு உதவும். மக்களின் ஆடம்பர நுகர்வுப் பொருட்களின் மீது அதிகளவு வரி விதிப்பதனால் நுகர்வு நாட்டத்தைக் குறைத்து விடுகின்றது. மறுபுறம் சேமிப்புத்தொகைகள், சேமிப்பு வைப்புக் கணக்குகள் தொடர்பாக வரிவிலக்குகளை வழங்கும் போது சேமிப்பு நாட்டம் அதிகரித்துவிடும். வெளிநாட்டில் உள்ள இலங்கையரால் திறக்கப்படும் சேமிப்புக் கணக்குகளிற்கு வரிச்சலுகை கொடுப்பதால் சேமிப்பு அதிகரிக்கப்படுவதுண்டு.

மறுபுறமாக ஆடம்பரப்பண்டங்களிலும் சேமிப்புக்களை வெளியே எடுப்போர் மீதும் அதிகளவு வரிவீதங்களைக் குறைக்கும் போதும் நாட்டின் சேமிப்பு குறைந்து விடுவதுண்டு.

அரசாங்கம் பண்டங்கள் சேவைகள் மீதான வரிகளை புதிதாக விதிப்பதனாலும் வரி வீதங்களை உயர்த்துவதாலும் உற்பத்தியின் பல்வேறு கட்டங்களிலும் வரி விதிப்பதாலும் பொது விலை மட்டம் உயர்ந்துவிடும்.

நேர்வரிகளைக் குறைப்பதனாலும் உயர் வருமானத்தவரின் செலவு நாட்டம் கூடிவிடும். இதனால் பணத்தின் சுற்றோட்டம் அதிகரிக்கும். இவ்வாறு பணநிரம்பல் உயர்வதனாலும் விலைமட்ட அதிகரிப்பு கூடிச் செல்ல முடியும்.

செல்வி. மு. ஜெயராணி.
ஆண்டு 10 B

# சுமைச்சீட்டு

சுமைச்சீட்டு எனப்படுவது கப்பல் மூலம் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும் வேளையில் பொருட்கள் கப்பலில் ஏற்றப்பட்டதனை உறுதிப்படுத்தியும், குறிப்பிட்ட துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கான சம்மதத்தையும் உறுதிப்படுத்தி உத்தியோக ரீதியாக கப்பல் கம்பனியால் வழங்கப்படும் பற்றுச்சீட்டாகும். இது ஓர் ஆவணமாகவும் பயன்படுகின்றது.

சுமைச்சீட்டில் மூன்று பிரதிகள் தயாரிக்கப்படுகின்றது. ஏற்றுமதியாளன் இச்சீட்டில் பொருட்களின் விபரம், சென்றடையும் துறைமுகம், கப்பலின் பெயர் ஆகிய விபரங்கள் குறிப்பிடப்பட்டு, மேடைச்சீட்டு அல்லது கப்பல் தலைவன்பற்றுச்சீட்டினையும் இணைத்து கப்பல் கம்பனி அலுவலகத்தில் கையளிப்பர். கப்பல் கம்பனி பொருட்களுக்குரிய கப்பல் கட்டணத்தை அறிவித்து கப்பல் கட்டணக் குறிப்பினை வழங்கிடுவார். இதனைத் தொடர்ந்து ஏற்றுமதியாளர் கப்பல் கட்டணத்தைச் செலுத்தியதும் அல்லது அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதும் சுமைச்சீட்டானது சரிபார்க்கப்பட்டு அதிகாரியினால் கையொப்பமிடப்பட்டு கப்பல் கம்பனி அவற்றை ஏற்றுமதியாளருக்கு வழங்கும். ஒரு பிரதியினை கப்பல் தலைவன் தனது பதிவிற்காக வைத்திருப்பர். ஒரு பிரதியை ஏற்றுமதியாளர் வைத்திருப்பர். மற்றைய பிரதி இறக்குமதியாளனுக்கு அனுப்பி வைக்கப்படும்.

சுமைச்சீட்டு பொதுவாக மூன்று நோக்கங்களை நிறைவேற்றுகின்றது.

அ) கப்பலில் பொருட்கள் ஏற்றப்பட்டதனை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு

ஆ) கப்பலில் இடத்தை எடுத்தல் தொடர்பாக பொருட்களை அனுப்பியோனுக்கும் கப்பல் உரிமையாளனுக்கும் இடையே மேற்கொள்ளப்படும் ஒப்பந்தம் ஆகும்.

இ) பொருளின் மீதுள்ள உடைமையினை உறுதிப்படுத்தும் ஆவணம் இவ் ஆவணத்தின் மூலம் இறக்குமதியாளர் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பொருட்கள் கப்பலில் ஏற்றப்படும் வேளையில் நல்ல நிலையில் காணப்படும் போது எவ்வித குறைபாடுகளையும் சுட்டிக் காட்டாது சமைச்சீட்டு வழங்கப்படின் அது குற்றமற்ற சமைச்சீட்டு எனப்படும். பொதியிடல் சேதம் தொடர்பான குறைபாட்டை குறிப்பிட்டு சமைச்சீட்டு வழங்கப்படுவதனை குற்றமுடைய பற்றுச்சீட்டு என அழைப்பர். ஆனால் இத்தகைய குற்றமுடைய சமைச்சீட்டின் காரணமாக இறக்குமதியாளன் பொருட்களை ஏற்கமறுத்து அல்லது நட்டஈடு கோரும் போது இது தகராறிற்கு வழிவகுப்பதுடன் நீதிமன்றத்திற்கும் இட்டுச் செல்லலாம். இதனைத் தவிர்க்கும் பொருட்டு ஏற்றுமதியாளன் நட்டஈட்டுச்சான்றிதழை வழங்கி அதன் மூலம் தூய வார்ஸாமம் அல்லது குற்றமற்ற பற்றுச்சீட்டைப் பெறுவர்.

நட்டஈட்டு சான்றிதழ் எனப்படுவது சேதமுற்ற பொருட்கள் சம்பந்தமாக கப்பல் கம்பனியிடமிருந்து தூயவார்ஸாமம் பெறும் பொருட்டு ஏற்றுமதியாளனால் கப்பல் கம்பனிக்கு வழங்கப்படும் ஒரு கடிதம் ஆகும். இக்கடிதம் மூலம் சேதமுற்ற பொருட்கள் தொடர்பாக கப்பல் கம்பனிக்கு ஏதேனும் நட்டம் ஏற்படின் அதனைப் பொறுப்பேற்பதாக எடுத்துக் கூறப்படுகின்றது

செல்வி. கு. குமாரிகா
ஆண்டு.9C

# வர்த்தக தர்மம்.

'வர்த்தகம் என்பது மிகக்குறைந்த விலைக்கு தரமற்ற பொருட்களை வாங்கி அத்துடன் பொய்களையும் புரட்டுக்களையும் கலந்து மிகக்கூடிய விலைக்கு ~~பொய்களையும் புரட்டுக்களையும் கலந்து மிகக்கூடிய விலைக்கு~~ விற்றுக் கொள்ளலாம் இலாபம், சம்பாதிக்கலாம், என்பது பழங் காலத்தில் இருந்து மக்கள் பலரால் பின்பற்றப்பட்டு வந்த பிழையான கருத்து, படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றது. இன்று இதுவும் ஒரு நேர்மையான தொழில் என்பது உணரப்பட்டது மட்டுமல்ல அது ஒரு தூயசேவை என்றும் கணிக்கப்படுமளவிற்கு வளர்ந்துள்ளது.

மனிதன் முயற்சிக்கு ஒரு வரையறுத்துத் தருவதே ஒழுங்கு அல்லது தர்மம் என்று அழைக்கப்படும். அரச நீதியைச் சத்திரிய தர்மம் என்றும் அசோகன் கண்ட அறத்தை அசோக தர்மம் என்றும் கேள்விப்பட்டிருக்கும் நாம் வர்த்தகத்திற்கு என்றொரு தர்மம் இருக்கின்றதா? அல்லது வைவியாகத்தென்றொரு வாழ்வு நெறியிருக்கின்றதா என்று எண்ணிப்பார்த்து அதற்கமைய ஒழுக வேண்டும். இன்று வர்த்தகக் கலை பள்ளிகளில் பயிற்றப் படுகின்றது. நாட்டில் வளர்ந்துவரும் வர்த்தகத் தொழில் நிலையங் -களின் உழியர்களாக அல்லது உரிமையாளராக வர இருக்கும் இளம் பிரஜைகளிற்கு வர்த்தகப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. வர்தகவியல் கற்பிக்கும் ஆசிரியர்கள் வர்த்தகதர்மம் ஒன்றைக் கடைப்பிடிக்க வல்ல இளம் சந்ததி ஒன்றை உருவாக்கும் பெரும் பொறுப்புடையவர் ஆவர்.

எமது பாடசாலைகளில் மதப் பின்னணியில் கல்வி என்ற கிறிக்கோளைக் கொண்டு கற்பிக்கப்படும் சமய பாடங்களில் உண்மை, நேர்மை போன்ற அறநெறிகள் வற்புறுத்தப்படுகின்றன. சமயம் கூறும் நெறிகளை நாம் மததர்மங்கள் என்று போதித்து வருகின்றோம். சமய ஆசிரியர் விடைப் பிரிந்த அதே கூடு ஆற முன்னர் அதே மேசையில் வர்த்தக ஆசிரியர் தனது கல்வித்தொண்டை தொடருகின்றார். நீரில் பாலைக் கலக்கும் வகையில் வியாபாரம் பிள்ளைகளிடம் கேட்கப்படுகின்றது. நல்ல தேயிலையுடன் தரம்குறைந்த தேயிலைக் கலந்து விற்றால் இலாபம் என்ன என்று கேட்கிறார். முதலாம் பாடத்தில் மத போதனையும் அறநெறி கருத்துக்களும். அடுத்தபாடத்தில்

பிள்ளையின் போக்கு திசை திருப்பப்பட்டு களவு கற்பிக்கப்படுகின்றது. அரச அங்கீகாரத்துடன் மக்களை ஏமாற்றி கொள்ளையிடும் சுரண்டல் சமுதாய அமைப்பின் பிரதிபலிப்பான பிரச்சனைகள் சொல்லித்தரப்படுகின்றன. பள்ளிகளும் பரிசில்களும் இந்தப் பாவங்களைக்கு பெருபேறாகத் தரப்படுகின்றன. ஆசிரியரோ அல்லது கல்வித்திட்டமோ இதற்காக தண்டிக்கப்பட வேண்டியதில்லை. உள்ளதை உள்ளபடி சொல்லித் தருவதில் தவறென்ன என்று கேட்கலாம். அதுவும் சரிதான். எந்த விடயத்திலும் எந்த சந்தர்ப்பத்திலும் சில அடிப்படையான நேர்மையை பின்பற்ற வேண்டிய மனோநிடம் மாணவர்க்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இதனை இலகுவான சில நடைமுறை உதாரணங்கள் மூலம் புரிய வைக்கலாம்.

1. பொருட்களை தட்டுப்பாடான காலங்களில் எல்லோர்க்கும் சமமான அளவில் பகிர்ந்து விநியோகித்தல். இதே நேரத்தில் அதே பொருளை மிகவும் அதிக இலாபத்துடன் விற்கும் வசதி இருப்பினும் அதனை நிராகரித்தல்.

2. அவசரமான நேரங்களில் அவசியமான பொருட்களை உடனடியாக (தனது சிரமத்தையும்) பாராமல் விற்பனை செய்தல்.

3. கள்ளக் கணக்கு அல்லது சிட்டை எழுத மறுத்தல்.

4. தடை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்யாது இருத்தல்.

5. உண்மையான ஏழ்மை நிலையில் உள்ளவர்க்கு உதவி செய்தல். சலுகை காட்டுதல்

6. வயதில் இளையோர், வயது நிறைந்தோர்க்கு அன்பாயும் ஆதரவாயும் நடந்து கொள்ளுதல்.

7. பொருட்களுக்கு விலை சொல்லவே தயங்கும் வர்த்தகர்கள் தமது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். அல்லது விலைப்பட்டியல் போட வேண்டும்.

வர்த்தகத்தில் மிகப் பெரிய துறையாக விளங்கும் கூட்டுறவு இயக்கம் இன்று கள்வர் குகையாக பெருச்சாளிகள் நிறைந்து காணப்படுகின்றது.

(தொடர்ச்சி 16ம் பக்கத்தில்)

# கப்பற்கூட்டுத்தாபனம்.

1971 ஆம் ஆண்டு விசேட பாராளுமன்ற சட்டத்தின் பிரகாரம் கப்பல் கூட்டுத்தாபனம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இதில் இலங்கை வங்கி, மத்திய வங்கி, மக்கள் வங்கி, அரசு ஆகியன முதலீடு செய்திருக்கின்றன.

கப்பல் கூட்டுத்தாபனம் பிரதானமாகக் கீழ்வரும் நோக்கங்களை உடையதாகக் காணப்படுகின்றது.

(i) இலங்கை, ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் ஆகியோரிற்கு அதிக கப்பல் சேவையினை அளித்தல்.

(ii) குறைந்த கட்டணத்தில் குறைந்த நிபந்தனையில் கப்பல் சேவையினை வழங்குதல்.

(iii) இலங்கையர்களிற்கு அதிக வேலைவாய்ப்புக்களை வழங்குதல்.

(iv) அந்நியச் செலாவணியை உழைத்தல்.

என்பனவாகும்.

கப்பல் கூட்டுத்தாபனம் அதிகளவு கப்பல் சேவையினை வழங்குவதற்காக புதிய கப்பல்களை காலத்திற்குக் காலம் கொள்வனவு செய்து சேவையில் ஈடுபடுத்துகின்றது.

உதாரணம் :

லங்கா அதுத்
லங்கா அத்துவக்
லங்கா ராணி

கப்பல் கூட்டுத்தாபனத்தின் பிரதான துணைக்கம்பனிகளாக Lanka Shiping lines (Ltd),

Lanka Tankers (Ltd) என்பன காணப்படுகின்றன.

கப்பல் கூட்டுத்தாபனத்தின் பிரதான துணைக் கம்பனியாகக் காணப்படும் Lanka shiping lines(Ltd) இன் பிரதான பணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(i) கரையோர கப்பல் போக்குவரத்து சேவையினை நடாத்துதல்.

(ii) தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் பயணிகள் போக்குவரத்தை மேற்கொள்ளல்.

(iii) கொம்பனி தெருவில் உள்ள தீர்வையற்ற கடைகளை நிர்வகித்தல்

என்பனவாகும்.

Lanka Tankers (Ltd) இன் பிரதான பணிகளாக மத்தியகிழக்கு நாடுகளில் இருந்து மசகு எண்ணெயினை வரவழைப்பதனை குறிப்பிடலாம். கப்பல் கூட்டுத்தாபனமும் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இணைந்து இதில் முதலீடு செய்திருக்கின்றன.

சு. கோணேஸ்குமார்.
ஆண்டு 13

# சரக்கிருப்புக்கட்டுப்பாடு

சரக்கிருப்புக் கட்டுப்பாடு என்பது அநேகமாக உற்பத்தி செய்வதாக வைத்திருக்கும் மூலப்பொருட்களைப் பொறுத்தாகிலும் உற்பத்தி செய்துமுடித்த பொருட்களைப் பொறுத்தாகிலும் எவ்வளவு வைத்திருக்கவேண்டும் என்ற திட்டமே ஆகும். உதாரணமாக ஒரு பேரளவு உற்பத்தியாளருக்கு மூலப்பொருட்களின் இருப்பு முடிந்தவுடன் உடனடியாக இம்மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கவேண்டும். இவ்வாறு கொள்வனவு செய்ய முடியாவிட்டால் மூலப்பொருட்கள் கிடைக்கும் வரை உற்பத்தியை நிறுத்தவேண்டிய நிலை ஏற்படும். இதனால் பெரும் நட்டம் ஏற்படும். உற்பத்தியை நிறுத்தாமல் தொடர்ந்து உற்பத்தியை நடத்தவேண்டுமானால் ஓரளவு மூலப்பொருட்களை இருப்பில் வைத்திருக்கவேண்டும். இருப்பு போதியளவில் இருக்கிறதா என்பதை அறிவதற்கு சரக்குக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பார்கள். இதற்கு உதவியாக இருப்பது ஓர் கணக்கு முறையாகும். இதைவிட உற்பத்தி செய்து முடிந்த பொருட்களையும் இருப்பில் வைத்திருப்பது அவசியம். ஏனெனில் திடீரென்று ஒரு உற்பத்திப் பொருளின் தேவை அதிகரிக்குமாயின் அவ்வுற்பத்தியாளரால் தேவைக்கேற்ற அளிப்புச் செய்ய முடியாமல் போய்விடும். அதேசமயம் இவ் உற்பத்தியாளர் வழக்கம் போல ஓரளவு உற்பத்தியை செய்து கொண்டிருக்கையில் இப்பொருட்களின் தேவை திடீரென குறைந்து விட்டால் இவ்வுற்பத்தியாளரின் இருப்பு கூடிவிடும். இதன் பயனாக இவர் மூலதனம் முடங்கியிருக்கும். எனவே தொடர்ந்து உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்படும்.

மேற்கூறப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்காக ஒருவர் சந்தை ஆராய்ச்சி செய்து அதற்கு ஏற்றவாறு தம்முடைய சரக்குகளைக் கட்டுப்படுத்தி வரவேண்டும். உதாரணமாக நுகர்வோரின் தேவை அதிகரிக்கும் போது மூலப்பொருட்கள் தொடர்ந்து கிடைக்கும் வரை போதியளவு இருப்பில் வைத்திருத்தல் வேண்டும். மறுபக்கம் நுகர்வோரின் தேவை குறையும் காலத்தில் தன் உற்பத்தியைக் கட்டுப்படுத்தி உற்பத்தி செய்யப்பட

பொருள் வீணாக முடங்கி இருக்காமல் சரக்கிருப்புக் கட்டுப்பாட்டை கையாண்டு வரல் வேண்டும்.

தற்காலத்தில் பொருட்களை உற்பத்தி செய்பவரோ அல்லது பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பவரோ உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளை இருப்பில் வைப்பதற்காகவோ அல்லது உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களை இருப்பில் வைப்பதற்காகவோ களஞ்சியங்களை வைத்திருக்கிறார்கள். இக்களஞ்சியங்களில் இருக்கும் சரக்கிருப்பை கட்டுப்படுத்துவதற்காகப் பலமுறைகளைக் கையாளுகின்றனர். இவற்றுள் பெட்டி அட்டை முக்கியமான முறையாகும்.

இம்முறைப்படி ஒவ்வொரு களஞ்சியத்தி-லும் இறாக்கைகள் இருக்கும். ஒவ்வொரு இறாக்கையிலும் புறாக்கூட்டு முறை போல மாடங்கள் செய்யப்பட்டிருக்கும். ஒவ்வொரு மாடமும் ஒவ்வொரு பொருளிற்கு உரியதாக இருக்கும். ஒவ்வொரு மாடத்திலும் ஓர் பெட்டி அட்டை இருக்கும். அதில் விபரம் எழுதப்பட்டிருக்கும். இவ்விபரத்தைப் பார்த்தும் ஒவ்வொரு வகைப் பொருளிலும் எவ்வளவு இருப்பு இருக்கும் என்பது உடன-டியாகத் தெரியும். உதாரணமாக ஆரம்ப இருப்புடன் கொள்வனவு செய்யப்பட்டிருக்கும் பொருட்களை விற்பனைக்க எடுக்கும் போதெல்லாம் அவ் இருப்பில் இருந்து கழிக்கப்பட்ட இறுதி இருப்பை பெட்டி அட்டை எப்பொழுதும் காண்பிக்கும். ஒவ்வொரு பொருட்களின் இருப்பும் குறைந்து கொண்டு வருகின்றது என்று அறிந்ததும் இப்பொருட்களைக் கொள்வனவு செய்து வைப்பதற்கு ஆயத்தம் செய்வர். எவ்வகைப் பொருட்களின் இருப்பு கூடுதலாக இருக்கின்றது என்று அறிந்து அவ்வகைப் பொருட்களைக் கொள்வனவு செய்ய மாட்டார்கள். இவ்வாறு சரக்கிருப்புக் கட்டுப்பாடு உற்பத்திக்கும் வியாபாரத்திற்கும் மிகவும் முக்கியமாக இருக்கின்றது. மேற் கூறப்பட்ட மாடமுறை உதிரிப் பாகங்களிற்கும் சிறிய அளவு பொருட்களை வைத்து விற்பனை செய்வதற்கும் உதவும். பெரும் பொருட்களிற்கு வேறு களஞ்சிய முறைகளைக் கையாளுவர். உதாரணமாக உத்தரவாத

விலைக்கட்டுப்பாட்டுள்ளிருக்கும் களஞ்சியங்களில் வரிசை முறைகளையும் கணக்குப் புத்தகத்தில் இருப்புக் கணக்குகளை வைத்தும் கட்டுப்படுத்தி வருவார்கள். வரிசை முறைபடி முன்வந்த பொருட்களை முன் வரிசையிலும் பின் வந்த பொருட்களைப் பின் வரிசையிலும் அடுக்குதல் வேண்டும். ஏனெனில் முன்வந்த பொருட்கள் பின்வந்த பொருட்களிலும் பார்க்க விரைவில் பழுதடைந்துவிடும். முன்வந்த பொருட்கள் முன்வரிசையில் இருந்தால் முன் விற்பனை செய்யக்கூடியதாக இருக்கும்

இவ்வாறான பல்வேறு விடயங்களைக் கருத்தில் கொண்டு சரக்கிருப்புக் கட்டுப்பாட்டைப் பேண வேண்டும். இதற்குப் பொறுப்பாக களஞ்சியப்பொறுப்பாளர் இருப்பார்.

செல்வி. க. கவிதா
ஆண்டு 11 A

## வர்த்தக தர்மம்

13ம் பக்க தொடர்ச்சி...

தனியார் துறைக்கு மாற்றாகவும் போட்டி போட்டு வளரக் கூடியது கூட்டுறவு இயக்கம்.

தேசபக்தி மிக்க வர்த்தகர்களை மாணவர்களும் ஆசிரியரும் பொதுமக்கள் மீது அன்பு கொண்டு கூட்டுறவு இயக்கத்தை தழைக்க வாய்ப்பான கூடாரம் ஆக்கிக் கொண்ட சுயநலமிகளைத் துரத்தியடித்தல் அவசியம். ஆற்றிலே போற தண்ணீர் அண்ணா குடி, தம்பி குடி என்றும் கூட்டுறவு இயக்கத்தில் ஒன்றி நின்று கழுத்தறுக்கும் சமுதாய விரோதிகளையும் ஒட்டுண்ணிகளையும் துணிவுடன் அகற்ற வேண்டியது அவசியம்.

- திரு. சி. சதாசிவம். ஆசிரியர் -

## பொருளாதார அபிவிருத்தி

நாம் சுதந்திரமடைந்து இருபது வருடங்களுக்கு மேலாக நமது நாடு பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி அடையவில்லை, என்றே கூறலாம். பொருளாதார அபிவிருத்தி ஏற்படாத காரணத்தால் நாட்டில் விலைவாசிகள் ஏறவும் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்துள்ளது. அபிவிருத்தியை நோக்கி நாட்டை முன்னேற்ற அரசாங்கம் ஏற்பட்ட போது பயங்கரவாத இயக்கத்தினால் பொருளாதார அபிவிருத்தி பின்தள்ளப்பட்டுள்ளது. இவ் இயக்கத்தின் காரணமாக அரசிற்கும் தனியாருக்கும் ஐம்பது கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனை அரசாங்கம் ஈடு செய்ய பொருளாதார அபிவிருத்தி இன்று முக்கியமாகக் கணிக்கப்பட வேண்டியதொன்றாகின்றது.

வெளிநாட்டு நாணய மாற்றுப் பற்றாக்குறை எமது நாட்டுப் பொருளாதார நெருக்கடியின் முதலாவது காரணமாகும். வரவு செலவுத்திட்டத்தில் ஏற்படும் பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்டுள்ள பணவீக்கம், அபிவிருத்தியடையாத பொருளாதார நிலை என்பன எமது இன்றைய கஷ்டங்களுக்கு உதாரணங்களாகும். நிதி அமைச்சரின் 1971 ஆம் வருட நவம்பர் மாத வரவு செலவுத்திட்டத்தில் இருநூறு கோடி ரூபா பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனைப் பெறுவதற்காக மக்களின் அன்றாடப் பாவனைப் பொருட்கள் சில முன்னைய விலையிலிருந்து மேலும் கூட்டப்பட்டுள்ளன.

இந்நிலை இன்னும் நீடித்தால் நாம் அந்நிய நாடுகளிடம் கடன்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். கடன்படுவதால் வட்டியும் முதலுமாக அதிக பணத்தை வருடாவருடம் அந்நாடுகளுக்குக் கொடுத்துக் கொண்டு இருக்க வேண்டும். இதனால் நாட்டின் அபிவிருத்தி வேலைகளுக்கு பணம் கிடைக்காமல் போய்விடும். எமது பிரதான ஏற்றுமதிப் பொருட்களாகிய தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களின் விலைகள் உலக

சந்தையில் தொடர்ச்சியாகக் குறைந்து வந்துள்ளது. அதேவேளை-யில் நாம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களின் விலைகளும் படிப்படியாக ஏறி வருகின்றது. ஆண்டு தோறும் அதிகரித்துச்செல்லும் அரசாங்க நடவடிக்கை-களினால் ஏற்படும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எமது நாட்டில் மேலதிகமான பணம் உருவாக்கப்பட்டது. இதன் காரணமாக எமது வெளிநாட்டு நாணயமாற்று வருமானக் குறைவிற்கேற்றவாறு வெளிநாட்டு நாணயமாற்று குறைவிற்கேற்ற-வாறு வெளிநாட்டு நாணயமாற்று செலவை குறைத்துக்கொள்ள முடியவில்லை.

நமது நாட்டில் 1965 ஆம் ஆண்டிற்குப் பின் நாம் பெற்ற அந்நியநாட்டுக்கடன் மிகவும் கூடுதலாக இருந்தது. இதே காலப்பகுதியில் ஏற்றுமதி வீழ்ச்சியும் காணப்பட்டது. இவ்வீழ்ச்சியைச் சமாளிக்க வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்களும், நன்கொடைகளும் போதியவையாக இருக்கவில்லை. எமது பொருளாதாரம் இன்று ஒரு பயங்கர நிலைமையை ஏற்படுத்தி-யுள்ளது. தற்போது வெளிநாட்டு நாணயமாற்றுத்தொகை எமது ஒரு மாத இறக்குமதிச் செலவிற்கே போதாமல் இருக்கின்றது. இத்தகைய நெருக்கடி நிலைமையை சமாளிக்க நாம் வருமானத்தி-ற்கேற்ற வகையில் எமது செலவை மேற்கொள்ள வேண்டும்.

இலவசக்கல்வி, இலவசசுகாதார சேவை, உணவுமானியம் போன்றவற்றிற்கான செலவுகள் அரசாங்கத்தி-னது ஆக்கச்செலவுகளும் அடங்கும். தற்போதைய நிலையில் அரசாங்க வருமானத்தைக் கூட்ட வேண்டும் அல்லது செலவுகள் செய்யும் தொகையைக் குறைக்க வேண்டும். பணவீக்கம் காரணமாக ஏற்படும் மேலதிகத் தேவைகளை இறக்குமதிகள் மூலமோ அல்லது உள்நாட்டு உற்பத்தியை விரைவாகப் பெருக்குவதன் மூலமோ நாம் பூர்த்தி செய்யாவிடின் நாட்டின் விலைவாசிகள் விரைவாக ஏறிக்கொண்டே போகும் என்பதில் ஐயமில்லை.

வேலையில்லாத் திண்டாட்டம் எமது நாட்டின் பிரச்சனைகளுள் ஒன்றாகும். ஏற்கனவே ஏறக்குறைய ஆறு இலட்சம் பேர்கள் வேலைவாய்ப்பின்றித் தவிக்கின்றனர். இவர்களுள் பட்டதாரிகளும் பெருமளவில் காணப்படுகின்றனர். சனப்பெருக்கம் அதிகமாக இருப்பதன் காரணமாக ஆண்டு தோறும் புதிதாக ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் வேலை வாய்ப்பிற்குப் புதிதாகக் காத்திருக்கின்றனர். வெளிநாட்டு நாணயமாற்றின் பற்றாக்குறைதான் அபிவிருத்தியின்மைக்குக் காரணமெனத் திரும்பத்திரும்பக் கூறுவதன் மூலமோ, நமது நாட்டிற்குச் சுபீட்சமில்லை, என்ற தோல்வி மனப்பான்மையை மேற்கொள்வதன் மூலமோ நாடு அபிவிருத்தி அடைய முடியாது என்பதனை நாம் உணர வேண்டும்.

எமது முக்கிய ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் எதிர்வரும் ஆண்டுகளில் உயர்வதற்கும் அறிகுறிகள் தென்படவில்லை. எனவே எமக்குக் கிடைக்கும் மிகவும் பயன் படத்தக்க வகையில் செலவு செய்ய முயற்சிக்க வேண்டும். இதுவரைகாலமும் இறக்குமதி செய்துவந்த பொருட்களில் பலவற்றை நம் நாட்டில் உற்பத்தி செய்வதன் மூலம் இவைகளின் இறக்குமதிகளைக் குறைத்து அந்நிய நாணயமாற்றினைச் சேமிக்க வேண்டும். சின்ன வெங்காயம், பாசிப்பயறு, மிளகாய் என்பவற்றை நமது நாட்டில் செய்கைபண்ண வசதியாய் இருக்கின்றது. ஆனால் அரசாங்கம் இதுவரை இவைகளின் அபிவிருத்தி பற்றி அதிககவனம் செலுத்தவில்லை. இப்பொழுது சின்ன வெங்காயம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் நமது விவசாயிகள் பெருமளவில் வெங்காயத்தை விருத்தியாக்க முன்வந்துள்ளனர்.

உருளைக்கிழங்கு செய்கையில் ஊக்கம் காட்டாமலிருந்த விவசாயிகள் சமீப காலமாக உருளைக்கிழங்குச் செய்கையில் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர். இதனால்

ஆண்டு தோறும் மூன்றுகோடி ரூபா அந்நியச்செலாவணி மிச்சமாகின்றது. நமது விவசாயிகளும் அதிக வருவாயைப் பெற்று வருகின்றனர். பல நீர்ப்பாசனத் திட்டங்களின் காரணமாகவும் மகாவலித் திட்டத்தின் காரணமாகவும் 1977 இல் நெல்லிலும் சுயதேவைப் பூர்த்தி ஏற்படுமென்று நம்பப்படுகின்றது. நமது நாட்டு மக்கள் முன்வந்தால் எதுவும் சாத்தியமாகும். என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

எம்மை பொருளாதார நிதி நெருக்கடி ஒரு பெரும் பிரச்சனை மாத்திரமல்ல. இது ஒரு பொன்னான சந்தர்ப்பமும் கூட. இச்சந்தர்ப்பத்தை தக்கபடி பயன்படுத்தினால் நமது நாட்டின் வருங்காலம் சுபீட்சம் நிறைந்ததாக இருக்கும். கடுமையாக உழைப்பதன் மூலமும் இயன்ற வரையில் நம்முடைய வருமானத்தில் ஒரு சிறு பகுதியை சேமிப்பதன் மூலமும் இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் நாம் பங்குபற்றுபவர்களாவோம். பிரதமர் சமர்ப்பித்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் ஒவ்வொருவரும் பங்கு கொள்வதன் மூலம் நமது நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்கு உதவியவர்களாவோம்.

செல்வி. க. இரத்தினாம்பாள்

ஆண்டு 11 A.

## கம்பனியும் முடிவுக்கணக்குகளும்.

தொடர்ச்சி....

### பங்கு மீள வழங்கல்.

கம்பனி ஒன்று தான் பறிமுதல் செய்த பங்கு-களை மீளவழங்கலாம். அவ்வாறு வழங்குகின்றபோது பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்ளல் வேண்டும்.

1. பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளின் முகப் பெறுமதிக்கு குறையாமல் வழங்கவேண்டும். முன்பு எவ்வளவு தொகைக்கு அழைத்ததோ அவ்வளவு தொகைக்கு பங்குமுதல் மீளவழங்கலின் போது அதிகரிக்கும்.

2. பங்கு பறிமுதல் இலாபமும் புதிய பங்குகளின் மீள வழங்கல் பணமும் பங்கின் பெயரளவுப் பெறுமதிக்கு குறைவாக இருத்தல் கூடாது

3. கழிவுடன் வழங்கப்படுமானால் அக்கழிவிற்கமைய வழங்கப்பட வேண்டும்.

மறு விநியோகத்தின் போது இடம் பெறும் சில பதிவுகள் :-

1. பங்குகள் மறுவிநியோகம் செய்யும் போது.
   மறு விநியோகக் கணக்கு வரவு
   பங்குமுதல் கணக்கு செலவு.

2. கிடைத்த பணத்திற்கான பதிவு.
   வங்கிக் கணக்கு வரவு
   மறுவிநியோகக் கணக்கு செலவு.

3. பங்கு பறிமுதல் இலாபம் மீள் மறுவினியோகத்திற்கு மாற்றப்படும் போது

பறிமுதல் கணக்கு வரவு

மறுவினியோகக் கணக்கு செலவு

4. மறுவினியோகம் செய்யும் போது வட்டத்துடன் வழங்கினால்...

மறுவினியோகக் கணக்கு வரவு

பங்கு முதல் கணக்கு செலவு

5. மீளவழங்கல் இலாபம் பங்குவட்டத்திற்கு வழங்கப்பட்டால்,

மறுவினியோகக் கணக்கு வரவு

பங்கு பறிமுதல் கணக்கு செலவு

6. கழிவுடன் மீளவழங்கல் மேற்கொள்ளும் போது,

பங்கு பறிமுதல் கணக்கு வரவு

மறுவினியோகக் கணக்கு செலவு

உதாரணம்:-

வரையறுக்கப்பட்ட ARL Ltd கம்பெனியானது 10/= பெறுமதியான 10 000 சாதாரண பங்குகளை அனுமதித்த மூலதனமாகக் கொண்டு இருந்தது. இவற்றில் 8 000 பங்குகளை 2/= கழிவுடன் வழங்கத் தீர்மானித்தது. பணம் பின்வருமாறு பெறப்பட்டது.

விண்ணப்பம் 2/=
ஒதுக்கல் 3/=
அழைப்பு 3/=

8000 பங்குகளிற்கு விண்ணப்பப் பணம் பெறப்பட்டது. ஒதுக்கலின் போது 2,000 பங்குகளிற்கும் அழைப்பின் போதும் இத்தொகைக்கு பணம் கிடைக்கவில்லை. இது உரியகால அவகாசத்துடன் பறிமுதல்

செய்யப்பட்டது. பின் 2 000 பங்குகளும் 9/= ரூபாவிற்கு மீள வழங்கப்பட்டது. இத்தரவுகளை நாட்குறிப்பேட்டிலும் பேரேட்டிலும் காட்டுக.

வங்கிக் கணக்கு வரவு 16 000
விண்ணப்ப ஒதுக்கல் கணக்கு 16 000
(8000 பங்குகளிற்கு 2/= வீதம் விண்ணப்பப்பணம் கிடைத்த போது)

விண்ணப்ப ஒதுக்கல் கணக்கு வரவு 16 000
பங்குமுதல் கணக்கு செலவு 16 000
(விண்ணப்பத்தொகை மூலதனக் கணக்கிற்கு மாற்றிய போது)

விண்ணப்ப ஒதுக்கல் கணக்கு வரவு 24 000
பங்குக்கழிவு கணக்கு வரவு 16,000
பங்கு மூலதனக்கணக்கு செலவு 40000
(ஒதுக்கல் தொகையை பங்கு மூலதனக்கணக்கிற்கு மாற்றிய போது)

வங்கிக் கணக்கு வரவு 18 000
ஒதுக்கல் நிலுவை கணக்கு வரவு 6 000
விண்ணப்ப ஒதுக்கல் கணக்கு செலவு 24 000
(6 000 பங்குகளிற்கு 3/= படி அறவிடப்பட்ட போதும் 3/= படி 2 000 பங்குகளிற்கு பணம் கிடைக்காத போதும் நிலுவை கணக்கிற்கு மாற்றிய போது)

அழைப்புக் கணக்கு வரவு 24 000
பங்குமுதல் கணக்கு செலவு 24 000
(ஒவ்வொரு 8000 பங்குகளிற்கும் 3/= படி அழைப்புப் பணம் மூலதனக் கணக்கில் பதிகின்ற போது)

வங்கிக் கணக்கு வரவு 18 000
அழைப்பு நிலுவை கணக்கு வரவு 6 000
அழைப்பு கணக்கு செலவு 24 000
(3/= படி 6000 பங்குகளிற்கு பணம் பெற்ற போதும்
3/= படி 2000 பங்குகளின் பணம் கிடைக்காத போதும்
நிலுவைக் கணக்கிற்கு மாற்றிய போதும்)

பங்குகளின் மூலதனக் கணக்கு வரவு 20000
பங்கு பறிமுதல் கணக்கு செலவு 20 000
(10/= வான 2000 பங்குகள் பறிமுதல் செய்கின்றபோது)

பங்கு பறிமுதல் கணக்கு வரவு 12000
ஒதுக்கல் நிலுவைக் கணக்கு செலவு 6000
அழைப்பு நிலுவைக் கணக்கு செலவு 6000
(ஒதுக்கல் அழைப்பு நிலுவைகள் பங்கு பறிமுதல் கணக்கிற்கு
மாற்றிய போது)

பங்கு பறிமுதல் கணக்கு வரவு 4000
பங்கு கழிவுக் கணக்கு செலவு 4000
(பறிமுதல் செய்த பங்கின் கழிவு பறிமுதல் கணக்கிற்கு
மாற்றியபோது)

மறுவிநியோகக் கணக்கு வரவு 18 000
பங்கு பறிமுதல் கணக்கு வரவு 2000
பங்குமுதல் கணக்கு செலவு 20000
(10/= முகப்பெறுமதியான 2000 பங்குகள் மீள
விநியோகம் செய்யப்பட்ட போது)

வங்கிக் கணக்கு வரவு 18000
மறுவிநியோகக் கணக்கு 18000
(2000 பங்குகளிற்கு 9/= படி பணம் பெறப்பட்ட போது)

பங்கு பறிமுதல் கணக்கு வரவு 2000
பங்கு வட்டக் கணக்கு செலவு 2000
(பங்கு பறிமுதல் மீதி பங்கு வட்டத்திற்கு மாற்றியபோது)

## வங்கிக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | விண்ணப்ப ஒதுக்கல்க்கு | 16 000 | | மீ/கீ/கொ/செ. | 70000 |
| | விண்ணப்ப ஒதுக்கல்க்கு | 18 000 | | | |
| | அழைப்புக் க/கு | 18 000 | | | |
| | மறுவிநியோகக் க/கு | 18 000 | | | |
| | | 70 000 | | | 70 000 |
| | மீ/கீ/கொ/வ | 70 000 | | | |

## பங்கு மூலதனக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | பங்கு பறிமுதல் க/கு | 20000 | | விண்ணப்ப ஒதுக்கல் க/கு | 16 000 |
| | மீ/கீ/கொ/செ. | 80 000 | | விண்ணப்ப ஒதுக்கல் க/கு | 40 000 |
| | | | | அழைப்புக் கணக்கு | 24 000 |
| | | | | மறுவிநியோகக் க/கு | 20 000 |
| | | 100 000 | | | 100 000 |
| | | | | மீ/கீ/கொ/வ | 80 000 |

## விண்ணப்ப ஒதுக்கல் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | பங்கு முதல் க/கு | 16 000 | | வங்கி | 16 000 |
| | பங்கு முதல் க/கு | 24000 | | வங்கி | 18 000 |
| | | | | ஒதுக்கல் நிலுவை | 6000 |
| | | 40000 | | | 40000 |

## அழைப்பு கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | பங்கு மூலதன க/கு | 24000 | | வங்கி | 18000 |
| | | | | அழைப்பு நிலுவை | 6000 |
| | | 24000 | | | 24000 |

## ஒதுக்கல் நிலுவைக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | விண்ணப்ப ஒதுக்கல் க/கு | 6 000 | | பங்கு பறிமுதல் க/கு | 6 000 |
| | | 6 000 | | | 6 000 |

## அழைப்பு நிலுவைக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | அழைப்புக் கணக்கு | 6000 | | பங்கு பறிமுதல் க/கு | 6000 |
| | | 6000 | | | 6000 |

## பங்குமுதல் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | ஒதுக்கல் தவணை | 6000 | | பங்கு மூலதன க/கு | 20 000 |
| | அழைப்பு தவணை | 6 000 | | | |
| | பங்கு கழிவு | 4 000 | | | |
| | பங்கு முதல் | 2.000 | | | |
| | பங்கு வட்டக்கு | 2.000 | | | |
| | | 20 000 | | | 20000 |

## மறுவினியோகக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | பங்கு முதல் | 18 000 | | வங்கி. | 18 000 |
| | | 18000 | | | 18000 |

## பங்கு கழிவுக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | பங்கு முதல் | 16 000 | | பங்கு பறிமுதல் | 4 000 |
| | | | | மீ/கீ/கொ/செ | 12 000 |
| | | 16 000 | | | 16 000 |
| | மீ/கீ/கொ/வ | 12 000 | | | |

## பங்கு வட்டக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | மீ/கீ/கொ/செ | 2000 | | பங்கு பறிமுதல் க/கு | 2000 |
| | | 2000 | | | 2000 |
| | | | | | 2.000 |

## ARL லிமிட்டெடின் நிதியாண்டு ஆரம்பத்திலுள்ளவாறான ஐந்தொகை.

| உரிமைகள் | தொகை | தொகை | சொத்துக்கள் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| அனுமதித்த மூலதனம். | | | நிலையான சொத்து | | |
| ஒவ்வொன்றும் 10/= வான | | | | | |
| 1000 சாதாரண பங்குகள் | 1000 00 | 1000 00 | | | |
| | | | நடைமுறைச் சொத்து. | | |
| வழங்கி இறுத்த மூலதனம் | | | வங்கி | 70000 | 70000 |
| ஒவ்வொன்று 10/= வான | | | | | |
| 8000 சாதாரண பங்குகள் | 80000 | 80000 | கற்பனைச் சொத்து. | | |
| ஒதுக்கம். | | | பங்குக்கழிவு | 12000 | 12000 |
| பங்கு வட்டம் | | 2000 | | | |
| | | 82000 | | | 82000 |

## முதன்மை ஏடுகள்.

வியாபார நிறுவனங்கள் தமது வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிந்து வைக்க முதலில் பயன் படுத்தப்படும் ஏடே முதன்மை ஏடு ஆகும். இது நாளேடு எனவும் தினசேரிகள் எனவும் மூல ஏடுகள் எனவும் தொடக்கப் பதிவேடுகள் எனவும் அழைக்கப்படும். அவ்வாறான முதன்மை ஏடுகளாகப் பின்வருவன காணப்படுகின்றன.

| முதன்மை ஏடுகள். | முதன்மை ஆவணங்கள். |
|---|---|
| காசேடு | கச்சாத்து, பற்றுச்சீட்டு. |
| கொள்வனவு நாளேடு | கொள்வனவுப் பட்டியல். |
| விற்பனை நாளேடு | விற்பனைப் பட்டியல் |
| பொதுக்குறிப்பேடு | கச்சாத்து, பட்டியல். |
| | முகாமைத்துவ அறிக்கை. |

### காசேடு

காசேடானது முதன்மை ஏடாகவும் பேரேடாகவும் தொழிற்படுகின்றது. இவ்வேட்டில் காசு சம்பந்தமான பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் பதிவு செய்யப்படும்.

காசேட்டு மாதிரி.

| திகதி | விபரம் | தொடர் | தொகை | திகதி | விபரம் | தொடர் | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

## கொள்வனவு நாளேடு

கொள்வனவு நாளேடானது கடன் கொள்வனவு சம்பந்தமான விபரங்களை முதலில் பதியப் பயன்படுகின்றது.

கொள்வனவு நாளேடு மாதிரி.

| திகதி | விபரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| | | | |

கொள்வனவு நாளேட்டின் மொத்தக் கூட்டுத் தொகை கொள்வனவுக் கணக்கில் வரவுப்பக்கம் பதியப்படும். தனிநபர் தேறிய தொகைகள் அவரவர் கணக்குகளில் செலவுப்பக்கம் பதியப்படும்.

## விற்பனை நாளேடு

விற்பனை நாளேடானது கடன் விற்பனை நடைபெறும் போது அவை பற்றிய விபரங்களை முதலில் பதிந்து வைக்கின்ற முதன்மை ஏடே விற்பனை நாளேடாகும்.

விற்பனை நாளேடு மாதிரி.

| திகதி | விபரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| | | | |

விற்பனை நாளேட்டின் மொத்தக்கூட்டுத் தொகை விற்பனைக் கணக்கில் செலவுப்பக்கம் பதியப்படும். தனியவர் தேறிய தொகைகள் அவர் அவர் கணக்குகளில் வரவுப்பக்கம் பதியப்படும்.

## பொதுக்குறிப்பேடு

பொதுக் குறிப்பேட்டில் பின்வரும் பதிவுகள் முதலில் பதிவு செய்யப்படும்.

(i) நிலையான சொத்து கடன் கொள்வனவு.
(ii) நிலையான சொத்து கடன் விற்பனை.
(iii) உரிமையாளர் சொந்தத் தேவைக்குப் பொருட்களை எடுத்தல்.
(iv) அறவிட முடியாக்கடன்களைப் பதிவழித்தல்.
(v) வழுக்களைத் திருத்துதல்
போன்றன.

பொதுக்குறிப்பேடு தயாரிக்கும் போது வரவுப்பக்க பதிவிலிருந்து செலவுப்பக்க பதிவிற்கு 1.3 cm அல்லது ½ அங்குலம் தள்ளி எடுப்பட வேண்டும். பொதுக்குறிப்பேடு ஒன்றிற்கு விளம்பல் இன்றியமையாததாகும். விளம்பல் என்பது குறிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலின்கான பதிவு எச்சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்டது என்பதை எடுத்துக் கூறுவதாகும்.

பொதுக்குறிப்பேடு மாதிரி.

| திகதி | விபரம் | வரவு | செலவு |
|---|---|---|---|
| | | | |

ந. சுகதர்சினி
ஆண்டு 9A.

## க.பொ.த (சா/த) பரீட்சை. டிசெம்பர் 1985

## வர்த்தகமும் கணக்கியலும் I

1. "நுகர்பொருள்" எனும் பதத்திற்குப் பின்வருவனவற்றுள் எது பொருத்தமானது.
   (i) முதலிட்டாளர் ஒருவரால் பெறப்பட்ட தொழில்நுட்ப நிபுணர் ஒருவரின் ஆய்வுரை.
   (ii) உற்பத்தியாளர் ஒருவரால் மொத்த விற்பனையாளர் ஒருவருக்கு விற்கப்பட்ட பொருட்கள்.
   (iii) வைத்தியச் சிறப்பறிஞர் ஒருவரிடமிருந்து பெற்ற ஆய்வுரை.
   (iv) ஒரு வணிக நிலையத்தினால் அமைக்கப்பட்டுள்ள தொலைபேசி

2. பின்வருவனவற்றுள் சார்புச் சேவை என்னும் வகுதியினுள் வருவதை இனம் காண்க.
   (i) மின் சாதனங்களிற்கு மட்பாண்டக் கூறுகளைச் செய்தல்.
   (ii) தரகுக்கூலி அடிப்படையில் பொருட்களை விற்றல்.
   (iii) பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்குப் பண்டகசாலைகளை வழங்குதல்.
   (iv) இறக்குமதி செய்த பொருட்களை விற்றல்.

3. கீழே காணப்படும் கூற்றுக்களுள் "சந்தை" என்ற பதத்தை விளக்கும் மிகப்பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க.
   (i) வாங்குவோரும் விற்போரும் சந்திக்கும் இடம்.
   (ii) கடைக்காரர் பல்வேறுபட்ட பண்டங்களை விற்கும் இடம்.
   (iii) இறக்குமதியும் ஏற்றுமதியும் நடைபெறும் இடம்.
   (iv) சில்லறை வியாபாரம் நடைபெறும் இடம்.

4. பெரிய அளவு உற்பத்தியிற் காணக்கூடிய ஒரு முக்கியமான அம்சம்
   (i) பெருந்தொகையான தொழிலாளர் தொகுதியாகும்.
   (ii) ஒரு பெரிய தொழிற்சாலைக் கட்டடம் ஆகும்.
   (iii) பெருந்தொகையான மூலப்பொருட் கையிருப்பு ஆகும்.
   (iv) தொழிற்பிரிவு ஆகும்.

5. பிரித்தெடுப்புக் கைத்தொழில் என்ற வகுதிக்குரிய கைத்தொழில் எது?

(i) சீமெந்துக் கைத்தொழில் (ii) மீன்பிடிக் கைத்தொழில்.
(iii) சீனிக் கைத்தொழில் (iv) மரப்பொருட் கைத்தொழில்.

6. சில்லறை வியாபாரி நுகர்வோருக்கு மிக முக்கியமான ஒருவராயிருக்கிறார். ஏனெனில்,

(i) அவர் ஒருவர் மாத்திரமே நுகர்வோருக்குப் பொருட்களை வழங்குகின்றார்.
(ii) அவர் நுகர்வோரின் தேவைகளிற்குத் தக்கவாறு பொருட்களை வழங்குகின்றார்.
(iii) அவர் மொத்த விற்பனையாளரிடமிருந்து பொருட்களைப் பெருந்தொகையாக வாங்கி, நுகர்வோருக்கு அவற்றைச் சிறுதொகைகளில் விற்கிறார்.
(iv) அவர் அடிக்கடி உற்பத்தியாளருக்கு அறிவுரை கூறுகின்றார்.

7. பல்பகுதிச் சில்லறைக்கடை (Department Store) ஒன்றைத் தொடங்குவதில் மிகவும் முக்கியமான காரணி எது என்று கருதுகின்றீர்?

(i) நுகர்வோரின் வருமானம் (ii) நுகர்வோரின் தனியாட் சுவைப்பாங்கு
(iii) கட்டடங்கள் (iv) இடம்.

8. பொருட்களை வழங்குவதில் நுகர்வோரைத் திருப்திப்படுத்தும் மிகச் சிறந்த வழி

(i) பொருட்களைக் கடனுக்கு விற்றல் ஆகும்.
(ii) நியாயமான விலையில் நல்லதரமான பொருட்களை விற்றல் ஆகும்.
(iii) நுகர்வோருடன் நெருங்கிய பழக்கத்தை விருத்தி செய்தல் ஆகும்.
(iv) தரத்தைக் கவனியாமல் மலிவான விலைகளில் பொருட்களை வழங்குதல் ஆகும்.

9. மொத்தவிற்பனையாளர் உற்பத்தியாளருக்கு எவ்வாறு மிக முக்கியமான ஒரு சேவையை ஆற்றுகின்றார்?

(i) <u>பொருட்களை ஒழுங்காகப் பெருந்தொகையாகக் கொள்வனவு செய்வதனால்.</u>
(ii) சில்லறை வியாபாரிகளைப்பற்றித் தகவல் கொடுப்பதனால்.
(iii) உற்பத்தியாளருக்கு மூலப் பொருட்களை வழங்குவதனால்.
(iv) மேலதிக மூலதனத்தை வழங்குவதனால்.

10, 11, 12, 13 ஆகிய வினாக்களிற்கு விடையளிக்கையில் பின்வரும் தலைப்புகளைப் பயன்படுத்துக.

A – வாடகைக் கொடுப்பனவு முறை  C – கேள்வி முறைமை.
B – பிற்போட்ட கொடுப்பனவு முறை  D – ஏலவிற்பனை.

10. அரசாங்கத் திணைக்களங்கள் தமக்குத் தேவையான பொருட்களைக் கிடைக்கக்கூடிய மலிவான விலை வீதங்களில் வழக்கமாக வாங்குகின்றன. வாங்குவதற்குக் கையாளப்படும் பொருத்தமான முறை எது?

(i) A  (ii) B  <u>(iii) C</u>  (iv) D.

11. வாங்குபவர், பொருட்களின் விலையில் ஒரு பகுதியைக் கொடுத்ததும் அப்பொருளின் உடைமையாளராகின்றார். இவ்வாறு விற்கும் முறையின் பெயர் என்ன?

(i) A  <u>(ii) B</u>  (iii) C  (iv) D.

12. இலங்கையில் இறப்பரை விற்பதற்குப் பயன்படுத்தப்படும் விற்பனை முறை எது?

(i) A  (ii) B  (iii) C  <u>(iv) D.</u>

13. தொலைக்காட்சிப் பெட்டி, சைக்கிள் என்பன போன்ற வியாபாரப் பொருட்கள் சிலவேளைகளில் கடனுக்கு விற்கப்படுகின்றன. இவற்றை விற்கும் பெருவழக்கமான முறை எது?

<u>(i) A</u>  (ii) B  (iii) C  (iv) D.

14. இரவீந்திரனுக்குக், காண் இலங்கை வங்கியில் ஒரு வங்கிக் கணக்கு இருக்கின்றது. அவன் இந்திக்கனின் பேரில் ஒரு காசோலை வரைகின்றான். இந்திக்கன் தனக்குக் கடன்கொடுத்தோருள் ஒருவனாகிய ரமகனுக்கு அந்தக் காசோலையைக் கைமாற்றுகின்றான். இந்திக்கனை எவ்வாறு பெயரிடுவீர்?

(i) வரைபவன். (ii) பிறப்பிப்பவன்.

(iii) உரிய ஒழுங்கில் வைத்திருப்போன் (iv) பெறுவோன்.

15. பொது வரையறுத்த கம்பனி சம்பந்தமான சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(i) பங்காளிகளின் குறைந்த பட்ச எண்ணிக்கை இரண்டாகும்.

(ii) கம்பனியை நடத்தவும் அதன் உள்ளக முகாமையையும் பற்றிய பிரமாணங்களின் கம்பனி அமைப்பக விதிகளுள் இடம் பெற்றுள்ளன.

(iii) கம்பனிப்பதிவாளர் உருவாக்கற் பத்திரத்தை வழங்கியவுடன், கம்பனி வியாபாரத்தைத் தொடங்க அனுமதியளிக்கப்பட்டு விடும்.

(iv) பங்காளிகளின் உச்ச எண்ணிக்கை 100 ஆகும்.

16. இலங்கையின் கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வங்கியின் பெயர் என்ன?

(i) கிராமிய வங்கி. (ii) கூட்டுறவு வங்கி.

(iii) கிராம அபிவிருத்தி வங்கி (iv) தேசிய அபிவிருத்தி வங்கி.

17. மாற்றுண்டியல் ஒன்றைப் பிற கைமாறத்தக்க சாதனங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டும் முக்கியமான சிறப்பம்சம் யாது?

(i) உண்டியல் ஒன்றை வரைவதற்குக் கொடுக்கல், வாங்கல் ஒன்று நிகழவேண்டும்.

(ii) ஒரு வங்கியின் ஓலைம் கொடுப்பனவைப் பெறுவதற்குக் அது கட்டாயம் வேண்டப்படுகின்றது.

(iii) அந்நியநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் மாத்திரமே இதனைப் பயன்படுத்த முடியும்.

(iv) உண்டியலின் முகத்திற் குறித்தாகக் கையொப்பமிட்டவரால் வரைவுண்ட அவ்வுண்டியலை ஏற்றுக்கொள்வது.

18. கீழே உள்ளவை காப்புறுதி சம்பந்தமான சில கூற்றுக்களாகும். இவற்றுள் சரியான கூற்று எது?

(i) சொத்து ஒன்றின் இழப்புக்கு, இழப்பின் அளவிற்கு மாத்திரமே காப்புறுதியளிப்பவர் பணம் கொடுக்கும் பொறுப்புள்ளவராவார்.

(ii) "உச்ச அளவான நல்விசுவாசம்" என்னும் தத்துவம் ஆயுட் காப்புறுதிக்கு மாத்திரமே ஏற்புடையது.

(iii) இழப்பு ஒன்று ஏற்படுமிடத்து, காப்புறுதியளிப்பவர் காப்புறுதிப் பத்திரத்தால் உறுதியளிக்கப்பட்ட முழுத்தொகையையும் கொடுப்பதற்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கிறார்.

(iv) பல காப்புறுதிக் கம்பனிகளில் தீக்காப்புறுதி செய்து பல பத்திரங்கள் வைத்திருக்கும் ஒருவர், நட்டமொன்று ஏற்படுமிடத்து, அந்தக் கம்பனிகள் எல்லாவற்றிலிருந்தும் நட்ட ஈட்டுப் பணம் பெற்றுக்கொள்ள முடியும்.

19. "பணம் பல்வேறு தொழிற்பாடுகளை ஆற்றுகின்றது" பின்வருவன இத்தொடர்பில் கொடுக்கப்பட்ட சில எடுத்துக்காட்டுகளாகும். "பெறுமானத்தின் அளவை" என்னும் தொழிற்பாட்டிற்குப் பொருத்தமானது எது?

(i) சேமிப்பு வங்கியில் ரூபா 500.00 ஐ வைப்புச் செய்தல்.

(ii) ரூபா 50 000.00 ஆன வங்கிக்கடன் ஒன்றை இரண்டு காலத்தில் 20 சதவீத வட்டியுடன் தீர்ப்பதற்கான ஓர் உடன்படிக்கை.

(iii) ஒரு லீற்றர் பண்படுத்தா எண்ணைக்கு ரூபா 6.00 என விலை குறித்தல்.

(iv) வியாபாரியொருவரிடமிருந்து ரூபா 150.00 பெறுமதியான வீட்டுத் தேவைப் பொருட்களை விலைக்கு வாங்குதல்.

20. விசாகப் பண்டிகைக் காலத்திற்கு வேண்டிய பொருட்கள் சேமித்து வைக்கப்படுவது ஏனெனில்.

(i) அந்தக் காலப்பகுதியில் பொருட்களை விற்பது இலாபந் தரும் என்பதனால்.

(ii) அந்தக் காலப்பகுதியில் கேள்வியைச் சமாளிப்பதற்குப் பெருந் தொகையான கையிருப்புக்கள் தேவைப்படும் என்பதனால்.

(iii) அந்தப் பொருட்கள் ஆண்டின் மற்ற மாதங்களில் வழக்கமாக விற்கப்படுவதில்லை என்பதனால்.

(iv) அந்தப் பொருட்கள் ஆண்டின் மற்ற மாதங்களில் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பதனால்.

21. முகாமையாளர்கள் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளில் அக்கறை காட்டுகின்றனர் ஏனெனில்

(i) முகாமையாளர்கள் கணக்கீடு பற்றி அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதனால்.

(ii) அது கம்பனிப் பதிவாளரால் விதிக்கப்பட்ட ஒரு தேவையாய் இருத்தலினால்.

(iii) அவர்கள் இதற்கு ஓர் ஊதியம் பெறுவதினால்.

(iv) நல்ல முகாமைக்கு அவசியமான தரவு கணக்கீட்டுப் பதிவுகளிலிருந்து பெறப்படுவதனால்.

22. சொத்துக்களை அவற்றின் திரவத்தன்மைக்கு ஏற்றவாறு ஒழுங்குபடுத்தியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

(i) இயந்திர சாதனம், கையிருப்பு, சில்லறைக் கடன்பட்டோர், காசு

(ii) காசு, வங்கிமீதி, கையிருப்பு, சில்லறைக் கடன்கொடுத்தோர்.

(iii) கையிருப்பு, சில்லறைக் கடன்கொடுத்தோர், வங்கிமீதி, காசுமீதி.

(iv) கையிருப்பு, சில்லறைக் கடன்பட்டோர், இத்தகைசாதனம், வங்கிமீதி.

23. பின்வருவனவற்றிற் சரியான சமன்பாட்டைத் தெரிவு செய்க.

(i) நடப்புச் சொத்து + நடப்புப்பொறுப்புகள் = தொழிற்படுமூலதனம்

(ii) மூலதனம் + நடப்புப்பொறுப்புக்கள் = நிலையான சொத்து

(iii) நடப்புச்சொத்து − நடப்புப்பொறுப்புக்கள் = தொழிற்படுமூலதனம்

(iv) நிலையான சொத்து − பொறுப்புக்கள் = மூலதனம்

24. பின்வருவனவற்றுள் நடைமுறைச் சொத்துக்களை மாத்திரம் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

(i) இயந்திரசாதனம், காசு, கையிருப்பு.
(ii) காசு, சில்லறைக்கடன்பட்டோர், கையிருப்பு.
(iii) சில்லறைக் கடன்பட்டோர், சேர்ந்துநின்ற செலவுகள், காசு.
(iv) இயந்திரசாதனம், எழுதுமுபகரணம், சில்லறைக்கடன்பட்டோர்.

25. ரூபா 1000.00 கடனிறுக்கவேண்டிய ஒருவர் ரூபா 800.00 மாத்திரம் கொடுக்கக்கூடியவராயுள்ளார். மீதி கணக்கேடுகளிலிருந்து பதிவழிக்கப்பட்டது. பேரேட்டுக் கணக்கில் இடம்பெறவேண்டிய சரியான பதிவு எது?

(i) வரவு - காசேடு ரூபா 800.00
செலவு - கடன்பட்டோர் கணக்கு ரூபா 10 000.00
(ii) வரவு - காசேடு ரூபா 1000.00
செலவு - கடன்பட்டோர் கணக்கு ரூபா 800.00
செலவு - அறவிடமுடியாக் கடன்கணக்கு ரூபா 200.00
(iii) வரவு - காசுக் கணக்கு ரூபா 800.00
வரவு - அறவிடமுடியாக் கடன்கணக்கு ரூபா 200.00
செலவு - கடன்பட்டோர் கணக்கு ரூபா 1000.00
(iv) வரவு - காசேடு ரூபா 800.00
வரவு - கழிவுக் கணக்கு ரூபா 200.00
செலவு - கடன்பட்டோர் கணக்கு ரூபா 1000.00

26. பல்வேறு காரணங்களிற்காக ஒரு பரீட்சைமீதியில் வரவுநிரலின் மொத்தமும் செலவு நிரலின் மொத்தமும் ஒத்திருப்பதில்லை. இதற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடியது பின்வருவனவற்றுள் எது?

(i) ஒரு கொடுக்கல் வாங்கல் முற்றாக விடுபட்டுப் போவது.
(ii) கணக்கேடுகளில் கூட்டல்களில் ஏற்படும் பிழைகள்.
(iii) வங்கிக் கூற்றில் தவறான பதிவு.
(iv) துணையேடு ஒன்றைத் தயாரிக்கையில் மூல ஆவணத்திலிருந்து எண்களைப் பிழையாகப் பிரதிசெய்தல்.

27. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுள் ஐந்தொகையின் சொத்துப்பக்கம் பொறுப்புப் பக்கம் ஆகிய இரு பக்கங்களையும் பாதிப்பது எது?

(i) வியாபார உடைமையாளர் கடன்கொடுத்த ஒருவருக்குத் தனது சொந்தப் பணத்திலிருந்து கொடுப்பனவு செய்தல்.
(ii) வழக்கொழிந்த சொத்துக்களை கைக்காசிற்கு விற்று ஏற்பட்ட பெறுமதியைக் காசாக்கியமை (தேற வைத்தமை)
(iii) வங்கிக்கடன் ஒன்றைத் திருப்பிக் கொடுத்தல்.
(iv) கைக்காசு கொடுத்து இயந்திர சாதனம் கொள்வனவு செய்யப்பட்டமை.

28. பின்வருவனவற்றுள் மூலதனத்தை அதிகரிக்கச் செய்யும் கொடுக்கல் வாங்கலைத் தெரிவு செய்க.

(i) கடன்கொடுத்தவர் ஒருவர் ரூபா 5000.00 கடனைத் தீர்ப்பதில் 2 சதவீத கழிவை அனுமதித்தார்.
(ii) ரூபா 2000.00 மேலதிகப்பற்றுக்கு வங்கி அங்கீகாரமளித்தது.
(iii) ரூபா 1500.00 கைக்காசு கொடுத்துப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
(iv) கடன்கொடுத்தவர் ஒருவருக்கு ரூபா 250.00 திருப்பிக் கொடுக்கப்பட்டது.

29. வரையறுத்த லிவெக்ரோ. கம்பனியிலிருந்து மின்சாதனங்களை வாங்கியது ரூபா 4500.00 இக்கொடுக்கல் வாங்கலைப்பதிவு செய்வதற்கு நீர் எந்தத் துணைநாட்குறிப்பைத் தெரிவு செய்வீர்?

(i) A (ii) B (iii) C (iv) D.

29, 30, 31, 32 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்கையில் பின்வரும் தலைப்புகளைப் பயன்படுத்துக.

A - விற்பனை நாட்குறிப்பு B - கொள்வனவு நாட்குறிப்பு.
C - வெளித்திரும்பல் நாட்குறிப்பு D - முறையான நாட்குறிப்பு

30. ரூபா 250.00 பெறுமதியான பொருட்கள் மொத்தவிற்பனை -யாளருக்குத் திருப்பியனுப்பப்பட்டன. இக்கொடுக்கல் வாங்கலைப் பதிவு செய்வதற்கு நீர் எந்தத் துணை நாட்குறிப்பேட்டைத் தெரிவு செய்வீர்.

(i) A (ii) B (iii) C (iv) D

31. விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஒரு தட்டெழுத்துப் பொறி ரூபா 8 500.00 இற்கு வ. பெரேரா என்பவரிற்கு விற்கப்பட்டது. இக்கொடுக்கல் வாங்கலைப் பதிவுசெய்வதற்கு நீர் எந்தத் துணை நாட்குறிப்பேட்டைத் தெரிவு செய்வீர்?

(i) A (ii) B (iii) C (iv) D.

32. ரூபா 1500.00 பெறுமதியுடைய, உபயோகிக்கப்பட்ட உபகரணங்கள் ரூபா 1400.00 இற்குக் கடனுக்கு விற்கப்பட்டன. இக்கொடுக்கல் வாங்கலைப் பதிவுசெய்வதற்கு நீர் எந்தத் துணை நாட்குறிப்பேட்டைத் தெரிவுசெய்வீர்?

(i) A (ii) B (iii) C (iv) D.

33. வியாபாரக் கணக்கில் பதிவுசெய்யப்படும் காணிக்கிணம்.

(i) விற்கும் செலவுகள் ஆகும்.

(ii) வியாபாரச் செலவுகள் ஆகும்.

(iii) கொள்வனவுகளின் பொருட்டுச் செலுத்தப்பட்ட போக்கு வரத்துக் கட்டணம் ஆகும்.

(iv) வியாபாரக் கழிவு ஆகும்.

34 "பட்டியல்" (கிரயப்பட்டி) என்பது வணிகர்களால் உபயோகிக்கப்படும் ஓர் ஆவணமாகும். இது ஒரு மூல ஆவணமாக எதற்குப் பயன்படுத்தப்படுகின்றது

(i) விற்பனை நாட்குறிப்பு, கொள்வனவு நாட்குறிப்பு என்னும் இரண்டையும் தயாரிப்பதற்கு

(ii) விற்பனை நாட்குறிப்பை மாத்திரம் தயாரிப்பதற்கு.

(iii) வெளித்திரும்பல் உட்திரும்பல் நாட்குறிப்புகளைத் தயாரிப்பதற்கு

(iv) ஆண்டிறுதியில் மொத்த விற்பனைகளைக் கணிப்பதற்கு.

35. 'ஒடுங்கு மீதிமுறை' தேய்மானத்தைக் கணிப்பதில் சில வேளைகளில் உபயோகிக்கப்படுகின்றது. இதிலே காணக்கூடிய விசேட அம்சம் என்ன?

(i) மூலக் கொள்விலையிலிருந்து ஆண்டு தோறும் ஒரு குறிப்பிட்ட சதவீதம் கழிக்கப்படுதல்.

(ii) அடுத்துப் பின்வரும் ஒவ்வோர் ஆண்டிலும் தேய்மானத் தொகை குறைவாய் இருத்தல்.

(iii) இம்முறை, கட்டடங்களுக்குத் தேய்மானம் கணிப்பதற்கு மாத்திரம் உபயோகிக்கப்படுவது.

(iv) இம்முறை பெரிய வியாபார முயற்சிகளினால் மாத்திரம் உபயோகிக்கப்படுவது.

36. பின்வரும் கணக்குகளில் எப்போதுமே வரவு மீதியாகக் காணப்படுவது எது?

(i) கடன்கொடுத்தோர் கணக்கு

(ii) தவணை முடியாத காப்புறுதிக் கணக்கு

(iii) வட்டிக் கணக்கு.

(iv) தேய்மான ஏற்பாட்டுக் கணக்கு.

37. "தொழிற்சாலைச் செலவுகள்" என்பதில் இடம்பெறும் செலவுகளாவன:

(i) மூலச்செலவும் நிர்வாகச் செலவும் ஆகும்.

(ii) நேர் உழைப்பும் நேர் திரவியமும் நேர்செலவும் ஆகும்.

(iii) உற்பத்திச் செலவும் நிர்வாகச் செலவும் விற்பனைச் செலவும் ஆகும்.

(iv) உற்பத்தியில் மறைமுகமாக சேர்ந்த ஏனைய எல்லாச் செலவுகளும் ஆகும்.

38. வணிகர் ஒருவரின் ஆயுட் காப்புறுதிக் கட்டுப்பணம் அந்த வணிக நிறுவனத்தினால் கொடுக்கப்படுகின்றது. இதனைப் பேரேட்டில் எவ்வாறு பதிவு செய்வீர்?

(i) வரவு - தற்செலவுக் கணக்கு
செலவு - காசேடு.

(ii) வரவு - காப்புறுதிச் செலவுக் கணக்கு.
செலவு - காசேடு.

(iii) வரவு - எடுப்பனவுக் கணக்கு.
செலவு - காசேடு.

(iv) வரவு - காப்புறுதிச் செலவுக் கணக்கு
செலவு - காப்புறுதிக் கம்பனிக் கணக்கு.

39. பின்வருவன ஒரு வியாபாரத்தை நடாத்துவதில் ஏற்பட்ட சில கொடுப்பனவுகளாகும். மூலதனச் செலவினம் என்னும் வகுதியில் இடம் பெறுவது எது எனக் காண்க.

(i) தொழிற்சாலையிலுள்ள இயந்திர சாதனங்களைப் பழுது பார்த்தல்

(ii) இயந்திர சாதனங்களை அமைப்பதில் ஏற்பட்ட செலவுகளிற்குப் பணம் கொடுத்தல்

(iii) இயந்திர சாதனங்களை இயக்குவதற்கான எரிபொருள் விலைப்பட்டியலுக்குப் பணம் கொடுத்தல்.

(iv) ஒப்படைக்கும் சைக்கிள்களிற்குப் புதிய டயர் கொள்வனவு செய்தல்.

40. தனிவியாபாரி வணிகம் ஒன்றின் தேறிய இலாபத்தை இலாபநட்டக் கணக்கின் வரவுப்பக்கத்திற் காணலாம். இதற்கான இரட்டைப் பதிவை எங்கு காண்பீர்?

(i) இலாபநட்டக் கணக்கு ; தேறிய இலாபக் கணக்கு.

(ii) மூலதனக் கணக்கு ; எடுப்பனவுக் கணக்கு.

(iii) இலாப நட்டக் கணக்கு ; மூலதனக் கணக்கு.

(iv) நடப்புக் கணக்கு ; எடுப்பனவுக் கணக்கு.

# வர்த்தகமும் கணக்கியலும் II
## பகுதி I

1. "சஞ்சீவ் ஸ்ரோர்ஸ்" எனும் வியாபார நிலையத்தின் கணக்கேடுகளிலிருந்து பின்வரும் பரீட்சை மீதி 1985 மார்ச் 31 இல் பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சைமீதி.

| | வரவு ரூபா | செலவு ரூபா. |
|---|---|---|
| மூலதனம் | | 50 900 |
| எடுப்பனவு | 4 200 | |
| காணியும் கட்டடமும். | 32 500 | |
| தளபாடமும் பொருத்திகளும் | 1 400 | |
| உபகரணம் | 6 500 | |
| கட்டடம் பழுதுபார்த்தல் | 1 100 | |
| கையிருப்பு (01-04-1984) | 10 840 | |
| அறவிட முடியாக் கடன்கள் | 400 | |
| வியாபாரச் செலவுகள் | 1 060 | |
| இறைவரிகள் | 720 | |
| கொள்வனவுகள் | 64 780 | |
| விற்பனைகள் | | 92 890 |
| உட்டிரும்பல் | 290 | |
| உட்சுமை கூலி | 600 | |
| சம்பளங்கள் | 7 460 | |
| அனுமதித்த கழிவு | 1 800 | |
| சில்லறைக் கடன்பட்டோர் | 7 680 | |
| சில்லறைக் கடன் கொடுத்தோர் | | 5 420 |
| மின் செலவுகள் | 1 450 | |
| அஞ்சல், தொலைபேசிச் செலவுகள் | 2 800 | |
| பெற்ற வாட்டகை | | 480 |
| காப்புறுதி. | 960 | |
| வங்கி மீதி | 3 150 | |
| | 149 690 | 149 690. |

பின்வருவனவற்றைக் கருத்திற் கொண்டு 1985 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வியாபார இலாபநட்டக் கணக்கையும் அத்தேதியிலுள்ளவாறான ஐந்தொகையையும் தயாரிக்க.

(i) 31-03-1985 இல் கையிருப்பு 11 230/=

(ii) 31-03-1985 இல் கொடுபடாத சம்பளம் 300/=

(iii) சேர்ந்து நின்ற இறைவரி 240/=

(iv) உபகரணத்திற்கு 10% தேய்மானத்திற்கு ஏற்பாடு செய்க.

(v) வருமதி வாடகை 240/=

(vi) முற்பணமாகச் செலுத்திய காப்புறுதி 120/=

## சம்பளக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 31/12/85 | மீதி | 7 460 | 31/12/85 | இ/ந/க | 7760 |
| 31/12/85 | அட்டுறு சம்பளம். | 300 | | | |
| | | 7760 | | | 7760 |
| | | 7[illegible] | | | |

## அட்டுறு சம்பளம்.

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை. |
|---|---|---|---|---|---|
| 31/12/85 | மீ/கீ/கொ/செ | 300 | 31/12/85 | சம்பளம் | 300 |
| | | 300 | | | 300 |
| | | | 1/1/86 | மீ/கீ/கொ/வ | 300 |

## இறைவரி கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 31/12/85 | மீதி | 720 | 31/12/86 | இ/ந/க/கு | 960 |
| 31/12/85 | அட்டுறு இறைவரி | 240 | | | |
| | | 960 | | | 960 |

## அட்டுறு இறைவரிக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 31/12/85 | மீ/கீ/கொ/செ | 240 | 31/12/85 | இறைவரி | 240 |
| | | 240 | | | 240 |
| | | | 01/01/86 | மீ/கீ/கொ/வ | 240 |

## உபகரண பெறுமானத்தேய்வுக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 31/12/85 | உபகரண பெ.தே.ஒ | 650 | 31/12/85 | இ/ந/க/கு | 650 |
| | | 650 | | | 650 |

## உபகரண பெறுமான தேய்வு ஒதுக்கக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 31/12/85 | மீ/கீ/கொ/செ | 650 | 31/12/85 | உபகரண பெ.தே | 650 |
| | | 650 | | | 650 |
| | | | 1/1/86 | மீ/கீ/கொ/வ | 650 |

## வாடகைக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 31/12/85 | இ/ந/க்கு | 720 | 31/12/85 | மீதி | 480 |
| | | | 31/12/85 | வருமதி வாடகை | 240 |
| | | 720 | | | 720 |

## வருமதி வாடகைக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 31/12/85 | வாடகை | 240 | 31/12/85 | மீ/கீ/கொ/செ | 240 |
| | | 240 | | | 240 |
| 1/1/86 | மீ/கீ/கொ/வ | 240 | | | |

## காப்புறுதிக் கணக்கு

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 31/12/85 | மீதி | 960 | 31/12/85 | முற்பண காப்புறுதி | 120 |
| | | | 31/12/85 | இ/ந/க்கு | 840 |
| | | 960 | | | 960 |

## முற்பண காப்புறுதிக் கணக்கு.

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 31/12/85 | காப்புறுதி | 120 | 31/12/85 | மீ/கீ/கொ/செ | 120 |
| | | 120 | | | 120 |
| 1/1/86 | மீ/கீ/கொ/வ | 120 | | | |

சஞ்சீவ் ஸ்ரோர்ஸின் 31-03-1985 இல் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான வியாபார இலாபநட்டக் கணக்கு.

| விபரம் | தொகை | தொகை | விபரம் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | | 10 840 | விற்பனை | 92 890 | |
| கொள்வனவு | 64 780 | 64 780 | (-) உட்திருப்பல் | (290) | |
| கொள்வனவுச் செலவு | | | தேறிய கொள்வனவு | 92 600 | 92 600 |
| உட்சுமை கூலி | 600 | 600 | | | |
| விற்க இருந்த சரக்கின் கொ.வி | | 76 220 | | | |
| (-) இறுதியிருப்பு | | (11 230) | | | |
| விற்ற சரக்கின் கொ.வி. | | 64 990 | | | |
| மொத்தலாபம் கீ/கொ/செ | | 27 610 | | | |
| | | 92 600 | | | 92 600 |
| நிர்வாகச் செலவு | | | மொத்தலாபம் மீ/கீ/கொ | | 27 610 |
| சம்பளம் | 7 760 | | வருமதி வாடகை | 720 | 720 |
| கட்டிடம் பழுது பார்த்தல் | 1 100 | | | | |
| இறை வரி | 960 | | | | |
| அஞ்சல் தொலைபேசிச் -செலவு | 2 800 | | | | |
| உபகரணப் பெறுமானத் -தேய்வு | 650 | | | | |
| மின்சாரம் | 1 450 | | | | |
| காப்புறுதி | 840 | 15 560 | | | |
| விற்பனை விநியோகச் செலவு | | | | | |
| அறவிடமுடியாக் கடன் | 400 | | | | |
| வியாபாரச் செலவு | 1 060 | | | | |
| அனுமதித்த கழிவு | 1 300 | 3 260 | | | |
| மொத்தச் செலவு | | 18 820 | | | |
| தேறிய லாபம் | | 9 510 | | | |
| | | 28 330 | | | 28 330 |

## சஞ்சீவ் ஸ்ரோர்ஸின் 31-03-1985 இல் உள்ளவாறான ஐந்தொகை.

| உரிமைகள் | தொகை | தொகை | சொத்துக்கள் | கொள் விலை. | பெ.தே | மீதி. |
|---|---|---|---|---|---|---|
| மூலதனம் | 50900 | | நிலையான சொத்து | | | |
| (+) இலாபம் | 9 510 | | காணி கட்டிடம் | 32 500 | ( _ ) | 32 500 |
| | 60 410 | | உபகரணம் | 6500 | (650) | 5850 |
| (-) எடுப்பனவு | (4 200) | 56210 | தளபாடம் பொருத்தி | 1 400 | ( — ) | 1 400 |
| | | | | 40 400 | (650) | 39 750 |
| நடைமுறைப் பரிப்பு. | | | | | | |
| கடன் கொடுத்தோர் | 5 420 | | நடைமுறைச் சொத்துக்கள். | | | |
| சென்மதி சம்பளம் | 300 | | | | | |
| சென்மதி இறைவரி | 240 | 5 960 | கையிருப்பு | | 11 230 | |
| | | | கடன்பட்டோர் | | 7680 | |
| | | | வருமதி வாடகை | | 240 | |
| | | | முற்பண காப்புறுதி. | | 120 | |
| | | | வங்கி மீதி | | 3 150 | 22 420 |
| | | 62 170 | | | | 62 170. |

உ (அ) பின்வரும் நிலைமைகள் ஒவ்வொன்றிற்கும் விடுபட்ட எண்ணைக் கணிக்க.

(i) மூலதனம் ரூபா 5400.00; பொறுப்புக்கள் ரூபா 3100.00.
சொத்துக்கள் ரூபா ........

சொத்துக்கள் = மூலதனம் + பொறுப்பு.
= 5400.00 + 3100.00
= 8500.00

(ii) பொறுப்புக்கள் ரூபா 1020.00: சொத்துக்கள் ரூபா 8020.00
மூலதனம் ரூபா ......

மூலதனம் = சொத்துக்கள் − பொறுப்புக்கள்.
= 8020.00 − 1020.00
= ரூபா 7000.00

(iii) நிலையான சொத்துக்கள் ரூபா 6100.00; நடப்புச் சொத்துக்கள் ரூபா 3200.00; நடப்புப் பொறுப்புக்கள் ரூபா 2400.00;
மூலதனம் ரூபா .......

மூலதனம் + நடப்புப் பொறுப்பு = நிலையான சொத்து + நடப்புச் சொத்து.
மூலதனம் + 2400.00 = 6100.00 + 3200.00
மூலதனம் + 2400.00 = 9300.00
மூலதனம் = 9300.00 − 2400.00
= ரூபா 6 90000

(iv) மூலதனம் ரூபா 10 000.00; நடப்புச் சொத்துக்கள் ரூபா 6000.00
நடப்புப் பொறுப்புக்கள் ரூபா 3500.00; நிலையான சொத்துக்கள் .....

நிலையான சொத்து + நடப்புச் சொத்து = மூலதனம் + நடப்புப் பொறுப்புக்கள்.
நிலையான சொத்துக்கள் + 6000.00 = 10 000.00 + 3500.00
நிலையான சொத்துக்கள் + 6000.00 = 13 500.00
நிலையான சொத்துக்கள் = 13 500.00 − 6000.00
= 7500.00

(v) மொத்தச் சொத்துக்கள் ரூபா 28 300.00; மூலதனம் ரூபா 23 500.00;
கடன்கொடுத்தோர் ரூபா ------

மூலதனம் + கடன்கொடுத்தோர் = மொத்தச் சொத்துக்கள்.

23500.00 + கடன்கொடுத்தோர் = 28 300.00

கடன்கொடுத்தோர் = 28 300.00 − 23500.00

= 4 800.00 ரூபா.

(ஆ) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு வரவு வைக்கப்பட வேண்டிய கணக்குகளையும் செலவு வைக்கப்பட கணக்குகளையும் பெயரிடுக.

(i) வரையறுத்த அலுவலக உபகரணத் தாபனத்திடமிருந்து ஒளிப்படப்பெருக்கும் கருவியொன்றை ரூபா 32 000.00 கடனுக்குக் கொள்வனவு செய்தது

(ii) உரிமையாளரால் வியாபார வங்கிக் கணக்கிற்குச் செலுத்திய காசு ரூபா 8000.00

(iii) ஜயந்த சில்வாவிடமிருந்து கடன்கொடுத்த ரூபா 6000.00 திருப்பிப் பெறப்பட்டது. இத்தொகைக்கு அவரிடமிருந்து ஒரு காசோலை கிடைக்கப்பெற்றது.

(iv) ஆண்டு முடிவின் கையிருப்பு விலைமதிப்பான ரூபா 6100.00 இறுதிக் கணக்குகளில் பதியப்பட்டது.

# தினசேரி

| திகதி. | தச. இல | விபரம். | பே. இலக் | வரவு | செலவு |
| --- | --- | --- | --- | --- | --- |
| | | ஒளிப்பதிவு எடுக்கும் கருவி கணக்கு. | | 32,000 | |
| | | . வரை உபகரண தாபனக் கணக்கு. | | | 32,000 |
| | | [ ரூபா பெறுமதியான ஒளிப்பதிவு எடுக்கும் கருவி வரையறுக்கப்பட்ட உபகரணத் தாபனத்திடம் வாங்கியபோது] | | | |
| | | வங்கிக் கணக்கு | | 8 000 | |
| | | மூலதனக் கணக்கு | | | 8 000 |
| | | [உரிமையாளரால் 8000/= மேலதிக மூலதனம் இடப்பட்டது] | | | |
| | | . காசுக் கணக்கு | | 6000 | |
| | | ஜயந்த சில்வா கணக்கு. | | | 6 000 |
| | | [ஜயந்த சில்வாவிடம் 6000/= பெற்ற போது] | | | |
| | | இறுதியிருப்புக் கணக்கு | | 6100 | |
| | | வியாபாரக் கணக்கு | | | 6 100 |
| | | [இறுதியிருப்பு 6100/= பதியப்பட்ட போது] | | | |

(3) பின் வருவன, 1984 யூன் 30 இல் முடிவுற்ற முந்திய நிதி ஆண்டிலிருந்து முன் கொணரப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் மீதிகள் ஆகும். நாட்குறிப்பை எழுதி மூலதனத்தைக் கணிப்பிடுக.

| | ரூபா. |
| --- | --- |
| காணியும் கட்டடங்களும். | 15 000.00 |
| கையிலுள்ள காசு. | 5 500.00 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 5 250.00 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 3 100.00 |
| கையிருப்பு | 9 600.00 |
| வங்கிக்கடன். | 4 000.00 |
| தவணை முடியாத காப்புறுதி | 300.00 |

## நாளேடு

| திகதி. | க.இ | விபரம் | பே. இலக். | வரவு | செலவு |
|---|---|---|---|---|---|
| 30/6/84 | | காணிகட்டிடக் கணக்கு. | | 15000 | |
| | | கடன்பட்டோர் கணக்கு. | | 5500 | |
| | | கடன் கொடுத்தோர் கணக்கு | | 5250 | |
| | | கையிருப்புக் கணக்கு | | | 3100 |
| | | வங்கிக் கடன் கணக்கு. | | 9600 | |
| | | முற்பண காப்புறுதிக் கணக்கு. | | 300 | |
| | | மூலதனம். | | | 28550 |
| | | | | 35650 | 35650 |

∴ மூலதனம் = 28 550 ரூபா.

5 (i) உற்பத்தியாக்கக் கணக்குகளைத் தயாரிக்கையில் "உபயோகிக்கப்பட்ட மூலப்பொருட்களின் செலவை எவ்வாறு கணிப்பீர்?

ஆரம்ப மூலப்பொருள் இருப்புடன் தேறிய மூலப்பொருள் கொள்வனவையும் மூலப்பொருள் கொள்வனவுச் செலவையும் சேர்த்து பெறுவது உபயோகிக்க இருந்த மூலப்பொருள் பெறுமதி ஆகும். இதிலிருந்து இறுதி மூலப்பொருள் இருப்பை கழித்தால் உபயோகிக்கப்பட்ட மூலப்பொருள் பெறுமதி கிடைக்கும்.

(ii) "மூலச் செலவு" (Prime Cost) என்னும் பதத்தினால் விளங்கிக் கொள்வது என்ன?

உபயோகிக்கப்பட்ட மூலப்பொருட்களின் செலவுடன் நேர்செலவுகள், நேர்கிரமச் செலவுகள் என்பனவற்றையும் உள்ளடக்கியதே மூலச்செலவு ஆகும். அதாவது உற்பத்திக்கான மூலாதாரச் செலவு மூலச்செலவு ஆகும்.

(3) பின்வரும் விபரங்கள் ஒரு உற்பத்தியாளரின் ஏடுகளிலிருந்து 1984 டிசெம்பர் 31 இல் எடுக்கப்பட்டுள்ளன. 1984 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான உற்பத்திக் கணக்கை தயாரிக்க.

| | ரூபா. |
|---|---|
| மூலப்பொருட்களின் கொள்வனவு | 25 600.00 |
| உட்சுமை கூலி | 1 100.00 |
| மூலப்பொருட் கையிருப்பு (01-01-1984) | 3 500.00 |
| மூலப்பொருட் கையிருப்பு (31-12-1984) | 4 200.00 |
| தொழிற்சாலைக் கூலிகள் (நேரி) | 6 800.00 |
| தொழிற்சாலைக் கூலிகள் (மறைமுக) | 2400.00 |
| மின்னும் எரிபொருளும் | 4 300.00 |
| பொறித் தொகுதியின் தேய்மானம் | 1 800.00 |
| இறைவரி (தொழிற்சாலை) | 840.00 |
| காப்புறுதி | 2 300.00 |

உற்பத்திக் கணக்கு.

| விபரம் | தொகை | தொகை | விபரம் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| ஆரம்ப மூ.பொ. இருப்பு | | 3500 | ஆக்கப் பொருள் செலவு வியாபாரக் கணக்கு மாற்று. | | 44440 |
| மூ.பொ. கொள்வனவு | | 25000 | | | |
| மூ.பொ. கொள்வு செலவு, | | | | | |
| உட்சுமை கூலி | | 1 100 | | | |
| உபயோகிக்க இருந்த மூ.பொ. | | 30200 | | | |
| (-) இறுதி மூ.பொ. இருப்பு | | (4 200) | | | |
| உபயோகித்த மூ.பொ. பெறுமதி | | 26000 | | | |
| நேர் செலவு, | | | | | |
| நேர் கூலி | | 6800 | | | |
| மூலக் கிரயம். | | 32 800 | | | |
| தொழிற்சாலை மேந்தலை | | | | | |
| கூலி. | 2 400 | | | | |
| மின்னும் எரிபொருளும். | 4 300 | | | | |
| பொறிப் பெறுமானத்தேய்வு | 1 800 | | | | |
| இறைவரி | 840 | | | | |
| காப்புறுதி. | 2 300 | 11 640 | | | |
| | | 44 440 | | | 44 440 |

பகுதி II

4.(1) சில பொதுத்தாபனங்களிற்குப் பல்பண்ட விற்பனை நிலையங்களிற்கு உள்ளவை போன்ற சில்லறைக் கடைகள் உள்ளன. இவற்றுள் இரண்டைப் பெயரிடுக?

(I) இலங்கை கூட்டுப் பொருள் கூட்டுத்தாபனம்.

(II) இலங்கை தேசி பொருட் கூட்டுத்தாபனம்

(2) உற்பத்தியாளரிற்கு மொத்த விற்பனையாளர் ஆற்றும் இரு சேவைகளைக் குறிப்பிடுக?

(I) விளம்பரம் செய்தல்.

(II) காரிய சேவையளித்தல்.

(3) வியாபாரக் கழிவிற்கும் காசுக் கழிவிற்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாகக் காட்டுக.

வியாபாரக் கழிவு என்பது வியாபாரத்தின் போது ஏற்படும் கழிவு ஆகும். அதாவது பட்டியல் விலையிலிருந்து கழிக்கப்படும் கழிவு ஆகும். இது கணக்குகளில் இடம்பெறாது.

காசுக் கொடுக்கல் வாங்கலின் போது ஏற்படும் கழிவு காசுக்கழிவு ஆகும். இது கணக்குகளில் பதியப்படும்.

(4) வங்கியாளர் ஒருவர் காசோலை ஒன்றிற்குப் பணம் கொடுக்க மறுக்கும் இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக?

(I) காசோலை சிதைவுற்றிருத்தல்.

(II) காசோலையில் உரியவரின் கையொப்பம் தவறாக இருத்தல்.

(5) அனுப்புமுகவர் ஒருவரின் தொழிற்பாடுகள் யாவை?

(I) பொதி அமைத்தல்.

(II) பொருட்களை ஏற்றுதல், இறக்குதல்.

(III) பொருட்களிற்கு பாதுகாப்பளித்தல்.

காப்புறுதிப் படுத்தல்.

(6) வாரிநாமம் ஒன்றை வாங்குபவர் யார்? அதனை வழங்குவதால் நிறைவேற்றப்படும் நோக்கங்கள் யாவை?

(7) ஏற்றுமதிக் கிராமங்களில் நீர் எவ்வகையான வணிக நிறுவனத்தைக் காண்பீர்?

மக்கள் கம்பனி.

(8) காசுக்கட்டளைக்கும் அஞ்சல் கட்டளைக்கும் இடையேயுள்ள இரு வித்தியாசங்களைத் தெளிவாகக் காட்டுக.

| காசுக்கட்டளை | அஞ்சல் கட்டளை. |
| --- | --- |
| (i) கூடிய தொகை 1000/= | கூடிய தொகை 50/= |
| (ii) கூடிய பாதுகாப்பு | குறைந்த பாதுகாப்பு |

(9) ஒரு பங்குடமையில் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறை இல்லாதது. இதனால் நீர் விளங்கிக் கொள்வது என்ன?

பங்குடமையில் நட்டம் ஏற்படும் போது பங்காளர் இட்ட மூலதனத்தை விட சொந்த சொத்துகளையும் இழக்க நேரிடும்.

(10) ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைப்பதற்கு அவசியமான அங்கத்தவர்களின் குறைந்த பட்ச எண்ணிக்கை என்ன?

10 பேர்.

(11) களஞ்சியக் காப்பாளர் ஒருவரது நான்கு தொழிற்பாடுகளை எழுதுக?
(3)

(i) கொள்வனவு செய்யும் பொருட்களிற்கான பதிவுகளை மேற்கொள்ளல்.
(ii) மேற்பார்வை செய்தல்.
(iii) கட்டளைகளை அனுப்புதல்.
(iv)

(12) உற்பத்தியாளர் ஒருவர் கனிஷ்டப்படுத்தலால் பெறும் இரண்டு அனுகூலங்களைத் தருக?

(i) இலாபம் அதிகரிக்கும்

(ii) குறைந்த செலவில் கூடிய பொருட்களை உற்பத்தி செய்யலாம்.

(13) புதிதாக அமைக்கப்பட்ட ஒரு வங்கித் தொழிற்பிரிவு, இலங்கை வதிவாளர்களுடன் வாணிகம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. இந்த வங்கித் தொழிற்பிரிவு யாது?

வதியாதோர் அந்நிய நாணய வங்கி அலகு.

(14) வெளிநாட்டுக்குச் செய்திகள் அனுப்ப இலங்கையிலே கிடைக்கும் தொடர்பாடல் முறைகள் யாவை?

(i) ரெலெக்ஸ்

(ii) பக்ஸ்.

(15) வினைத்திறமையுடைய ஒரு போக்குவரத்து முறையில் பார்க்கக் கூடிய சிறப்புக் கூறுகள் யாவை?

(i) குறைந்த செலவு

(ii) கூடிய விரைவு

(iii) கூடிய பாதுகாப்பு

(iv) அதிக வசதி

5.(i) கம்பனி ஒன்றினால் "முன்விபரணம்" வெளியிடப்படுவதன் நோக்கம் என்ன?

கம்பனிகள் தமது நோக்கம், மூலதனம் இயக்குனர்கள் பற்றிய விபரங்களை பொது மக்களுக்கு அறிவிக்கும் நோக்கோடு முன்விபரணம் வெளியிடப்படுகின்றது.

(2) கம்பனிகள் சம்பந்தமாக "சட்ட ஆளுமை" (Legal entity) எனும் பதத்தை விளக்குக?

கம்பனிகள் சட்டத்தின் முன் தனியொரு -வரைப் போல் காணப்படுகின்றன இதனால் கம்பனி சட்ட ஆளுமை உடைய நிறுவனமாகும்.

(3) பெரும்பாலான மக்கள் பொதுக் கம்பனிகளில் முதலீடு செய்ய விரும்புகின்றனர். இதற்கான காரணங்களைத் தருக?

(i) பங்குகளைச் சுலபமாகக் கைமாற்றம் செய்யலாம்

(ii) பாதுகாப்பு அதிகம்.

(iii) மூலதனம் அதிகமாக இருப்பதால் பங்குகளிற் -கான இலாபம் அதிகமாகக் காணப்படும்.

(4) கம்பனிகளினால் வழங்கப்படும் இருவகையான பங்குகளைப் பெயரிட்டு, பங்காளிற்குப் பங்கிலாபங்களின் கொடுப்பனவு எவ்வாறு செய்யப்படுகின்றது என்பதனை விவரிக்க.

(i) சாதாரண பங்கு

(ii) முன்னுரிமைப் பங்கு.

கம்பனி உழைக்கும் இலாபத்தில் முதலில் முன்னுரிமைப் பங்குதாரர்களிற்கு வழங்கிய பின்னரே சாதாரண பங்குதாரர்களிற்கு இலாபம் வழங்கப்படும். மேலதிக இலாபம் இல்லாவிட்டில் சாதாரண பங்குதாரர்களிற்கு இலாபம் இல்லை.

(5) ஒரு வரையறுத்த கம்பனிக்கு தனியாளர் ஒருவரிற்கோ பங்குடைமை ஒன்றிற்கோ இல்லாத பல தனிப்பட்ட சிறப்புக் கூறுகள் உள்ளன. அந்தச் சிறப்புக் கூறுகள் யாவை?

(i) சட்ட ஆளுமை காணப்படும்.

(ii) பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்கும்.

(b) எந்த நேரத்திலாயினும் நீர் எவ்வாறு ஒரு கம்பனியின் பங்காளியாக வருவீர் என விளக்குக.

கம்பனியின் பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் பங்காளியாக வரலாம்.

6 (1) காப்புறுதி முகவர் ஒருவரின் தொழிற்பாடுகள் யாவை?

(i) காப்புறுதித் திட்டங்களை விளம்பரப்படுத்தல்.

(ii) காப்புறுதி செய்வோரிற்கு விண்ணப்பங்களை பூர்த்தி செய்ய உதவுதல்.

(iii) காப்புறுதி பற்றிய விளக்கங்களை மக்களிற்கு கொடுத்தல்.

(2) "நட்ட ஈட்டுத்" தத்துவத்தை விளக்குக. உதாரணங்கள் தந்து விளக்கந் தருக.

ஒருவர் காப்புறுதி செய்து குறிப்பிட்ட விபத்தால் நட்டம் ஏற்படும்போது அத் தொகையை ஈடு செய்தற்காக உறுதிப்படுத்தும் தத்துவமே நட்ட ஈட்டுத்தத்துவம் எனப்படும்.

(3) காப்புறுதிப் பத்திரங்கள் சம்பந்தமாக பின்வரும் பதங்களால் நீர் என்ன விளங்கிக் கொள்கிறீர்.

(அ) கடன் பெறுமதி.

ஆயுள் காப்புறுதி செய்து கொண்ட ஒருவர் குறித்த கால எல்லைக்குப் பின்பு ஆயுள் காப்புறுதிப் பத்திரத்தை ஈடாக வைத்து கடன் பெறலாம். இத் தொகையே கடன் பெறுமானம் எனப்படும்.

(ஆ) இறுத்த பத்திரப் பெறுமதி:

ஆயுள் காப்புறுதி செய்பவர் தவணைக் கட்டணங்களை தொடர்ந்து செலுத்த முடியாது இருப்பின் இப்பத்திரப் பெறுமதியின் கீழ் ஆயுட்காப்புறுதியை முடிவுக் கொண்டுவரலாம். இதன்படி செலுத்திய தவணைக்கட்டணத்தொகை குறிப்பிட்ட காலத்தின் பின்பு உரியவர்க்கு வழங்கப்படும்.

(4) இலங்கையின் பயிர்ச்செய்கைக் காப்புறுதிச் சபையால் காப்புறுதியளிக்கப்படும் ஆபத்துக்கள் யாவை?

(i) வெள்ளப் பெருக்கு

(ii) வறட்சி

(iii) வனவிலங்குகள், பறவைகள் என்பவற்றால் ஏற்படும் சேதம்.

# வணிக மாணவர் மன்றம் - 1992.

மன்றக்காப்பாளர்:

மன்றப்பொறுப்பாசிரியர்: திரு. இ. பசுபதீஸ்வரன். ஆசிரியர்.

தலைவர் : செல்வி. தி. சுகந்தினி

உபதலைவர் : செல்வி. ச. தமிழ்ச்செல்வி.

செயலாளர் : செல்வி. ச. அனுஷா.

உபசெயலாளர் : செல்வன். இ. சுதாகரன்.

பொருளாளர் : செல்வி. ச. ராஜசுகிர்தா.

இதழாசிரியர் : செல்வி. ஆ. இரத்தினாம்பாள்

வகுப்புப்பிரதிநிதிகள்:

ஆண்டு 11 : செல்வி. தி. ஸ்ரீநந்தினி

ஆண்டு 10 : செல்வி. க. துஷித்தா.

ஆண்டு 9 : செல்வி. செ. லவந்திஷா.

XXXX XXXX XXXX XXXX